# நீதி கிடைப்பதை உறுதிசெய்வோம்

இலங்கையின் எதிர்காலத்தை முன்னிட்டு மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

AMNESTY INTERNATIONAL



சர்வதேச பொதுமன்னிப்பு சபை ஓர் உலகளாவிய இயக்கம். 150க்கும் மேற்பட்ட நாடுகளில் இவ்வியக்கம் பரவியுள்ளது. ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் ஆர்வலர்கள் என 30 லட்சம் பேருக்கும் அதிகமானோர் இதில் உள்ளனர். மோசமான மனித உரிமை மீறல்களை முடிவுக்குக் கொண்டுவரும் பிரச்சாரப் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மனித உரிமைகள் உலகப் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் சர்வதேச தர அளவுகோள்களின் அடிப்படையிலான பிற உரிமைகளையும் உலக மக்கள் ஒவ்வொருவரும் அனுபவிக்க இடம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்பது எங்கள் இலட்சியம்.

எந்த ஒரு அரசாங்கமோ, அரசியல் சித்தாந்தமோ, பொருளாதார நலனோ, மதமோ சாராத சுயாதீனமான அமைப்பு இது. இது பெருமளவில் உறுப்புரிமைக் கட்டணம் மற்றும் பிறர் வழங்கும் நன்கொடைகளைக் கொண்டே செயல்படுகிறது.

AMNESTY INTERNATIONAL

முதலில் பிரசுரிக்கப்பட்டது 2013ல். பிரசுரித்தோர்

Amnesty International Ltd
Peter Benenson House
1 Easton Street
London WC1X 0DW
United Kingdom

ஆவணக் குறியீட்டு எண்: ASA 37/011/2014
மூல மொழி: ஆங்கிலம்
அச்சிட்டது சர்வதேச பொதுமன்னிப்பு சபை, சர்வதேச செயலகம்,
ஐக்கிய ராஜ்ஜியம்.

இப்பிரசுரத்திற்கான அனைத்து உரிமைகளும் தக்கவைத்துக்கொள்ளப்படுகிறது. பிரசுர உரிமைக் காப்பீட்டுச் சட்டத்தால் இப்பிரசுரம் பாதுகாக்கப்படுகிறது. ஆனால் கட்டணம் வசூலிக்காமல் ஆலோசனை வழங்கும் நோக்கிலோ, பிரச்சார நோக்கிலோ அல்லது கல்வி நோக்கிலோ இதனை மறு பிரசுரம் செய்யலாம். இருந்தபோதும் இதனை மீண்டும் விலைக்கு விற்க முடியாது. இந்த பிரசுரத்தை அனுமதிக்கப்பட்ட வழியில் பயன்படுத்துவோர் பிரசுரத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதை முன்னிட்டு தம்மிடம் பதிவுசெய்துகொள்ள வேண்டும் என்று பிரசுர உரிமை உடையவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள். மற்ற சூழல்களில் இந்த பிரசுரத்தின் நகலைப் பயன்படுத்தவோ, மற்ற பிரசுரங்களில் பயன்படுத்தவோ அல்லது மொழி மாற்றி, வாசகங்களை மாற்றி பயன்படுத்தவோ விரும்புவோர் பிரசுரதாரர்களிடம் இருந்து எழுத்து மூல முன்-அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். இதற்கு ஒரு கட்டணம் செலுத்த வேண்டி வரலாம். அனுமதி பெறவேண்டும் என்றாலோ பிற கேள்விகள் இருந்தாலோ copyright@amnesty.org என்ற மின் அஞ்சலைத் தொடர்புகொள்ளவும்.

அட்டைப் படம்: © தனியார்

amnesty.org

# உள்ளடக்கம்

அறிமுகம் ..............................5

பின்னணி ...........................7

தேசிய மனித உரிமை கட்டமைப்பு வடிவம் (ஷரத்துகள் 2.3, 14.1) .............................12

நீதித்துறை மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் சுயாதீனமாக செயல்படுதல் .................12

அடிப்படை உரிமைகள் வழக்குகள் .............................................14

இலங்கை மனித உரிமைகள் ஆணையம் ........................................15

ஹேபஸ் கார்பஸ் - ஆட்கொணர்வு மனு .........................................16

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு எதிராக நடந்த மோசமான விதிமீறல்கள் (பிரிவுகள் 6, 7, 8, 9, 10) ...............................18

பெண்களுக்கு எதிரான வன்முறை (பிரிவுகள் 2.1, 3,6, 7) .........................21

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் (பிரிவுகள் 9,14) .................................23

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ..................................23

உயிர்வாழ்வதற்குள்ள உரிமை (பிரிவு 6) ..................................27

சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனைகள் மற்றும் தடுப்புக்காவலில் ஏற்படும் மரணங்கள் ..................................27

தடுப்புக்காவலில் நிகழ்ந்த மரணங்கள் ..................................28

சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனைகள் ............................28

பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டவர்கள் காணாமல்போதல் ..........................29

மரண தண்டனை ......................................30

குற்றவியல் சட்டக் கட்டமைப்பின் வழியாக நடக்கும் துஷ்பிரயோகங்கள் (பிரிவுகள் 7, 9) ...............................31

சித்ரவதை மற்றும் மோசமாக நடத்தப்படுதல் .....................................33

எதேச்சதிகாரமான மற்றும் சட்டவிரோதமான தடுப்புக்காவல் ....................................35

குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்கத் தேவையில்லாத சூழல் (பிரிவுகள் 2, 3, 6) ..................................38

கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுதல், ஒருங்கிணைந்து செயல்படுதல் சுதந்திரம் (பிரிவுகள் 19, 21, 22) ..........................................41

மத சுதந்திரம், கலாச்சார மற்றும் மத உரிமைகள் (பிரிவுகள் 18, 27) ....................47

சிறுபான்மையினரின் உரிமைகள் (பிரிவுகள் 2, 18, 26, 27) ...........................48

பரிந்துரைகள் .............................................51

நிறைவுக் குறிப்புகள்.................................59

# அறிமுகம்

ஐநா மனித உரிமைகள் குழு (குழு என்று இனி சொல்லப்படும்) இலங்கை தொடர்பாக ஐந்தாவது அறிக்கையை 2014 ஒக்டோபரில் பரிசீலிக்கவிருப்பதற்கு முன்பாக இந்த ஆவணத்தை அம்னெஸ்டி இண்டர்நேஷனல் சமர்ப்பிக்கிறது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தத்தை (ICCPR என்றோ ஒப்பந்தம் என்றோ இனி சொல்லப்படும்) இலங்கை நடைமுறைபடுத்துவது பற்றி குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு முறை நடைபெறும் இந்த பரிசீலனைக் கூட்டம் ஆராயும். இந்தக் குழுவானது 2014 மார்ச்சில் வெளியிட்ட பிரச்சினைப் பட்டியலில் தெரிவித்திருந்த குறிப்பிட்ட மனித உரிமை கரிசனைகள் பற்றி இந்த ஆவணம் கவனம் செலுத்துகிறது. ஆவணம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் காலகட்டத்தில் இந்த விஷயங்கள் எவ்வாறு இருந்தன என்பது விவரமாக பதியப்பட்டுள்ளது. குறிப்பாக 2012க்கும் 2014க்கும் இடைப்பட்ட காலத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் இதில் உள்ளன. மனித உரிமை மீறல்களைச் சந்தித்து அதன் பின்னர் இலங்கையில் இருந்து வெளியேறியவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரிடம் விசாரித்து சேகரிக்கப்பட்ட தகவல்கள், இலங்கையில் உள்ள மனித உரிமை ஆர்வலர்களிடம் இருந்து தொலைதொடர்பு மூலம் பெறப்பட்ட தகவல்கள் இந்த ஆவணத்தில் உள்ளன. இலங்கையில் மனித உரிமை கண்காணிப்பாளர்களிடம் அந்நாட்டின் அரசாங்கம் பகைமை பாராட்டுவதால், இலங்கையில் அடக்குமுறையை சந்தித்தவர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரிடம் இருந்து சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தகவல் பெறுவது என்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. சாட்சிகளின் பெயர்கள், அவர்கள் தற்போது தங்கியுள்ள இடங்கள், இலங்கையில் அவர்கள் இருந்த இடங்களின் பெயர்கள், தேதிகள் மற்றும் தொடர்புகொண்ட விதம் போன்ற விஷயங்களை அம்னெஸ்டி இண்டர்நேஷனல் வெளியிடவில்லை. ஏனென்றால் இப்போதும் இலங்கையில் உள்ள சாட்சிகளின் உறவுக்காரர்களுக்கு எதிராக பழிவாங்கும் நடவடிக்கைகள் வர வாய்ப்பு உள்ளது . நாடு திரும்பிய தஞ்சக் கோரிக்கையாளர்களுக்கு எதிராக இலங்கையில் பழிவாங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதற்கு தெளிவான முன்னுதாரணங்களும் உண்டு.

இலங்கையின் மனித உரிமை நிலவரம் தொடர்பான குழுவின் நான்காவது அறிக்கை 2002ல், விடுதலைப் புலிகளுக்கு அரச படைகளுக்கும் இடையே ஒரு போர்நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்டிருந்தது. இந்த அறிக்கையை குழு 2003ல்

பரிசீலித்திருந்தது. தற்போதைய அறிக்கை, 2007ல் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது, ஆனால் அது கணிசமான காலம் தாமதமாகிப்போய் இறுதியாக 2012 ஒக்டோபரில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2003 முதல் 2012 வரையிலான ஒன்பது வருட காலகட்டம் பற்றி இந்த அறிக்கை பேசுகிறது. இந்த காலகட்டத்தில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களின் இயல்பிலும் அளவிலும் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. ஏனென்றால், இந்த காலகட்டத்தில், ஒரு ஐந்து வருட போர் நிறுத்தத்திலிருந்து ஒரு கடுமையான யுத்தக் கட்டத்துக்கு சென்று, அதிலிருந்து மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்ற யுத்தத்துக்கு பின்னரான கட்டம் ஒன்றுக்கும் இலங்கை சென்றிருந்தது. இவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டிருந்தும் 2003ல் ஐநா குழு தமது அறிக்கையின் நிறைவுரையில் தெரிவித்திருந்த மனித உரிமை கரிசனைகளில் முக்கியமானவை 11 ஆண்டுகள் கழிந்து இப்போதும் இருந்துவரவே செய்கின்றன. குறிப்பாக இலங்கை இப்போதும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நம்பியிருக்கவே செய்கிறது; அந்த சட்டத்தின் ஷரத்துகள் ஒப்பந்தத்தை மீறுவதாகவே உள்ளன; சித்ரவதை, பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டவர்கள் காணாமல்போதல், கருத்து சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் பொன்றவை பறிக்கப்படுதல் போன்ற விஷயங்கள் இலங்கையில் தொடர்ந்தும் நடந்துவரவே செய்கின்றன.[1] இலங்கையில் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்க வேண்டியதில்லை என்ற நிலைமை இன்னும் நீடித்துவருவதும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் நீதி வழங்கவும் உள்நாட்டு வழிமுறைகள் தவறிவருவதும், இலங்கை தனது சிறுபான்மை சமூகங்களை வன்முறையிலிருந்தும், பாரபட்சத்திலிருந்தும் பாதுகாக்கத் தவறிவருவதும், விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளோடு தொடர்புடையவர்களாக சந்தேகிக்கப்படுவோர், அவர்தம் உறவினர்கள், மற்றும் காணாமல்போன உறவினர்கள் பற்றி அதிகாரிகளிடம் விவரம் கேட்டு வருவோர் போன்றவர்கள் பரவலாகவே சித்ரவதை, பாலியல் வன்முறை, சட்டத்துக்கு அப்பாற்பட்ட தண்டனையாக கொல்லப்படுவது போன்ற துஷ்பிரயோகன்களை சந்தித்து வருவதும் அம்னெஸ்டி இண்டர்நேஷனலுக்கு ஆழ்ந்த கவலையத் தந்துவருகிறது.

# பின்னணி

2002ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் ஏற்பட்டிருந்த போர்நிறுத்தம், உத்தியோகபூர்வமாக விலக்கிக்கொள்ளப்பட்டது 2008 ஜனவரி 2ஆம் தேதியென்றாலும், 2006ஆம் ஆண்டிலேயே முழு அளவிலான யுத்தம் ஆரம்பித்துவிட்டது. அதற்கு ஒரு வருடம் முன்பிலிருந்தே இரண்டு தரப்பிலிருந்துமே வன்முறையும், மனித உரிமை மீறல்களும், துஷ்பிரயோகங்களும் பெருமளவில் அதிகரித்திருந்தன. கண்மூடித்தனமாக பொதுமக்கள் கொல்லப்பட்டது, எதேச்சதிகாரமாக ஆட்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டது, சித்ரவதை செய்யப்பட்டது, பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போனது, சட்டத்துக்கு அப்பாற்பட்ட தண்டனை பாணியில் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்களும் இதில் அடங்கும். 2008 செப்டம்பர் வாக்கில், நாட்டிலிருந்த சர்வதேச மனிதாபிமானப் பணியாளர்களை மோதல்கள் நடந்துவந்த வட பகுதியிலிருந்து இலங்கை அரசாங்கம் வெளியேற்றிவிட்டு, அதன் பின்னர் விடுதலப் புலிகள் எதிரான தனது இறுதிக்கட்ட இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. 2009 மே 18ஆம் தேதி விடுதலைப் புலிகளை தாம் தோற்கடித்துவிட்டதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.

நேரில் கண்டவர்களின் நம்பத்தகுந்த சாட்சியங்கள், ஐநா அமைப்புகளும் அரசு சாரா அமைப்புகளும் சேகரித்த கணிசமான தகவல்கள் ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இரண்டு தரப்புமே போர்க்குற்றங்களைச் செய்துள்ளனர் என்று தெரியவருகிறது. பொதுமக்களும், சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களும் கொல்லப்பட்டது, பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போனது உள்ளிட்டவையும் இதில் அடங்கும். "மோதல் அற்ற இடம்" என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட இடங்களிலும் மருத்துவமனைகள் போன்ற இடங்களிலும் இலங்கை இராணுவத்தினர் வீசிய ஷெல் குண்டுகள் திரும்பத் திரும்ப விழுந்திருந்தன. இதில் மருத்துவப் பணியாளர்கள், பொதுமக்கள் போன்றோர் கொல்லப்பட்டிருந்தனர். இவர்கள் விடுதலைப் புலிகளால் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிகிறது. யுத்தப் பிரதேசத்தில் சிக்கிக்கொண்ட மக்களுக்கு போதுமான உணவு, குடிநீர், மருந்துகள் கிடைக்க இடமளிக்கப்படவில்லை.[2] யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் 40,000 சிவிலியன்கள் வரை கொல்லப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த ஆதாரங்கள்

அடிப்படையில் மதிப்பிடப்படுவதாக இலங்கையில் பொறுப்புகூறலைக் கொண்டுவருவதில் ஐநா தலைமைச் செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்கான நிபுணர் குழு 2011 மார்ச்சில் கூறியிருந்தனர்.[3] இலங்கையில் ஐநாவின் செயற்பாடுகள் சம்பந்தமாக உள்ளக பரிசீலனை செய்த குழு இலங்கையில் கணக்கில் வராமல் போயுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 70,000 என மதிப்பிடுகிறது.[4]

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், கிட்டத்தட்ட 3,00,000 தமிழின பொதுமக்கள் வெளியே வர முடியாத இடைத்தங்கல் முகாம்களில் இராணுவத்தினரின் காவலில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டிருந்தவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டிருந்த சுமார் 12,000 பேர் தனியாக அடைத்துவைக்கபட்டிருந்தனர். இவர்கள் அதிகமான காலத்துக்கு முறையான குற்றச்சாட்டுகளோ வழக்கு விசாரணையோ இன்றி தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். இலங்கை அரசாங்கத்திடம் சரணடைந்தவர்கள் கேள்விக் கணக்கின்றி கொல்லப்பட்டதைக் கண்டதாகவும் சாட்சிகள் அம்னெஸ்டி இண்டர்நேஷனலிடம் தெரிவித்திருந்தனர். விடுதலைப் புலி உறுப்பினர்களின் உறவுக்காரர்களை இராணுவம் கொண்டு சென்றது என்றும் அப்படி பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டவர்கள் காணாமல் போயினர் என்றும் சாட்சிகள் தெரிவிக்கின்றனர். இராணுவம் தமிழ் மக்களை நடத்திய விதத்தை விமர்சித்த ஊடகவியலாளர்களும் அரசியல் ஆர்வலர்களும் தாக்கப்பட்டும் கைதுசெய்யப்பட்டும் இருந்தனர்.[5]

சர்வதேச சட்டங்களின் கீழ் குற்றமாக அமையக்கூடிய குற்றஞ்சாட்டப்படும் இப்படியான சம்பவங்கள் தொடர்பில் இதுநாள்வரையில் நம்பத்தகுந்த விசாரணை எதுவுமே உள்நாட்டளவில் நடந்ததில்லை. அக்குற்றங்களைச் செய்தவர்களாக சந்தேகிக்கப்படுவோர் எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க எந்த ஒரு முயற்சியும் செய்யப்பட்டிருக்கவில்லை.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் சர்வதேச சட்டங்கள் மீறப்பட்டது தொடர்பில் சர்வதேச அளவிலும் உள்நாட்டளவிலும் கரிசனைக் குரல்கள் ஒலிக்க 2010 மே மாதம், படிப்பினைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு LLRCயை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார். 2002 பிப்ரவரியில் விடுதலைப் புலிகளுடனான போர்நிறுத்தம் ஆரம்பித்தது முதல் 2009 மேயில் யுத்தம் முடிவுக்கு வந்தது வரையிலான காலகட்டத்தில் நடந்த சம்பவங்களை ஆராய்ந்து, நாட்டில் இன நல்லிணக்கத்துக்கான பரிந்துரைகளை செய்ய வேண்டியது LLRCயின் வேலையாக பணிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் மிகப் பெரிய அளவில் மனித உரிமை

பிரச்சினைகள் இருப்பதை LLRCயின் இறுதி அறிக்கை ஏற்றுக்கொண்டிருந்த்து. அதில் பலவற்றுக்கு தீர்வு காண்பதற்கான பரிந்துரைகளையும் அது பரிந்துரைத்திருந்தது. ஆனால் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கான நடவடிக்கை பற்றி அது முழுமையான அளவில் பேசியிருக்கவில்லை.[6] LLRCயின் பல பரிந்துரைகளை நடைமுறைபடுத்துவதற்கான தனது செயல் திட்டத்தை 2012 ஜூலையில் இலங்கை அரசாங்கம் வெளியிட்டிருந்தது. ஆனால் குற்றஞ்சாட்டப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மோசமான மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் போன்றவை தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை அறிவிக்க இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது. மாறாக, எந்த நிறுவனங்கள் மீது குற்றஞ்சாட்டப்படுகிறதோ அதே நிறுவனங்களை வைத்து அக்குற்றச்சாட்டுகளை விசாரிக்க ஏற்பாடு செய்தது.[7]

குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்கத் தேவையில்லை என்ற கலாச்சாரம் இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடப்பதற்கு முன்பாகவும், யுத்தம் நடந்த நேரத்திலும் வலுவாகக் காலூன்றிவிட்டது. தற்போதும் அங்கு சட்டத்தின் மாட்சிமை நிலைநாட்டப்படுவதற்கு இந்த கலாச்சாரம் பெரிய தடையாக இருந்துவருகிறது. இலங்கையின் அரச படைகள் மற்றும் அவர்களைச் சார்ந்த ஆயுதக்க்குழுக்களும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த சண்டைகளின் பின்னணியில் நடந்த மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையோ, நீதியோ, நிவாரணமோ கிடைக்கவில்லை. பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல் போனவர்களின் கதி அவர்கள் இருக்கின்ற இடம் பற்றியெல்லாம் குடும்பத்தாருக்கு தகவல் தர இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது. தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களை வெளியில் சொல்ல முற்பட்டவர்களும் இலக்குவைக்கப்பட்டு தண்டிக்கப்பட்டுள்ளனர்.

2014ஆம் ஆண்டிலும்கூட இலங்கையில் மோசமான மனித உரிமை மீறல்கள் நடப்பதாக பாதிக்கப்பட்டவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் அம்னெஸ்டி இண்டர்நேஷனலிடம் முறையிட்டுவருகிறார்கள். ஆட்கள் எதேச்சதிகாரமாக கைதுசெய்யப்படுதல், தடுத்துவைக்கப்படுதல், சித்ரவதைசெய்யப்படுதல், பிற வகையில் மோசமாக நடத்தப்படுதல் உள்ளிட்டவை இதில் அடங்கும். பொலிசாரும் பாதுகாப்பு படையின் மற்ற பிரிவினரும் பாலியல் வன்முறையில் ஈடுபடுவதென்பதும் இதில் அடங்கும். இப்படியான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவர்களில் பெரும்பான்மையானோர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டிருந்தவர்களாக சந்தேகிக்கப்படும் தமிழர்கள் என்றாலும்,

சிங்களவர்கள், இலங்கை முஸ்லிம்கள் ஆகியோரும்கூட பாதிக்கப்பட்டதுண்டு. அமைதியான முறையில் விமர்சனம் செய்பவர்களும்கூட கைதுசெய்யப்பட்டும் தாக்கப்பட்டும் உள்ளனர். ஐநாவுக்கு ஒத்துழைத்த அல்லது ஒத்துழைப்பதாக சந்தேகிக்கப்படும் மனித உரிமை ஆர்வலர்கள் அச்சுறுத்தப்படுவதென்பதும் அவர்கள் மீது பழிபோடும் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்படுவதென்பதும் நடந்ததாஜ்க ஐநா மனித உரிமை கவுன்சில் கூட்டத்த்ல் இலங்கையில் பொறுப்புக்கூறல் பற்றி ஒவ்வொரு தடவை ஆராயப்படும்போதும் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன.

ஐநா மனித உரிமை கவுன்சிலில், "இலங்கையில் சமூக நல்லிணக்கதையும், பொறுப்புக்கூறலையும் மனித உரிமை சூழலையும் மேம்படுத்துவது" என்ற நோக்கத்தில் தீர்மானம் 25/1 மீதான வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பாக, கொழும்பிலிருந்து செயல்படும் ஒரு முன்னணி மனித உரிமை ஆர்வலர், ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் மற்றும் யுத்ததின்போது காணாமல் போயிருந்தவர்களின் குடும்பத்தார் பலர் உள்ளிட்டோர் வட இலங்கையில் வைத்து கைதுசெய்யப்பட்டிருந்தனர். பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டவர்கள் காணாமல்போனது தொடர்பில் பொறுப்புகூறல் வர வேண்டும் என வெளிப்படையாக குரலெழுப்பியிருந்தவர்கள் இவர்கள். இவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்த அதே நேரத்டில் வட இலங்கையில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு அறுபதுக்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு புத்துயிர் அளிக்க முயல்வதாக குற்றஞ்சாட்டப்பட்டு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் முறையான குற்றச்சாட்டு எதுவும் இன்றி தடுத்துவைக்கப்பட்டனர். இலங்கையின் கிழக்குப் பகுதிகளிலும் அதிரடி தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மதச் சிறுபான்மையினர் மீதும், அவர்களது வீடுகள், கடைகள், வழிபாட்டு இடங்கள் மீதும் அரசாங்கத்தோடு தொடர்புடையவகளாக கூறப்படும் பௌத்த கடும்போக்கு தேசியவாதக் குழுக்கள் தாக்குதல் நடத்துவதென்பதும் அதிகரித்து வந்துள்ளது. அவ்விதமான தாக்குதல்களைத் தடுக்கவோ, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவோ அதிகாரிகள் பெரிதாக எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

2014ல் நிறைவேற்றப்பட்ட 25/1 தீர்மானமானது, இலங்கையின் மனித உரிமை சூழலை ஐநா மனித உரிமை ஆணையர் அலுவலகம் (OHCHR) கண்காணித்து வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டது. மேலும்,இலங்கையின் அரசாங்கப் படைகளும், விடுதலைப் புலிகளும் செய்ததாக "குற்றஞ்சாட்டப்படும் மோசமான மனித உரிமை

மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்கள் பற்றி முழுமையான விசாரணை ஒன்றை அவர்கள் நடத்த வேண்டும்" என்றும் அது பணித்திருந்தது. மனித உரிமைச் சூழலைக் கண்காணிப்பதிலும் பொறுப்புகூறலைக் கொண்டுவருவதிலும் சர்வதேச பங்களிப்பு வருவதை இலங்கை தொடர்ந்தும் நிராகரித்து வந்துள்ளது. OHCHR அலுவலம் நடத்துகின்ற விசாரணைக்கும் ஒத்துழைக்க மாட்டோம் என இலங்கை அறிவித்திருந்தது.[8] ஐநாவின் விசேட நடைமுறைகள் பணிக்குழுவினர் இலங்கை வருவதற்கான அனுமதியை நீட்டித்துத் தரவும் அவர்கள் தவறியுள்ளனர். மேலும், எதேச்சதிகார தடுப்புக்காவல், பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டோ விருப்பத்துக்கு மாறாக கொண்டுசெல்லபட்டோ காணாமல் போனவர்கள் பற்றிய விசேட பணிக்குழுவினர், சட்டத்துக்கு அப்பாற்பட்ட, வழக்கு விசாரணையற்ற, எதேச்சதிகார மரண தண்டனை பாணியிலான கொலைகள் சம்பந்தப்பட்ட விசேட தூதர், மனித உரிமை ஆர்வலர்களின் நிலை தொடர்பான விசேட தூதர், கருத்து சுதந்திரம் பாதுகாக்கப்படுவது மற்றும் முன்னேற்றப்படுவது தொடர்பான விசேட தூதர் மற்றும் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் சம்பந்தமான விசேட தூதர் உட்பட பல்வேறு நபர்கள் இலங்கை வர விண்ணப்பித்திருந்தாலும் அவர்களுக்கு அனுமதி வழங்க இலங்கை மறுத்துவருகிறது. இலங்கையில் நீடித்த சமாதானமும், பொறுப்புகூறலும்,நல்லிணக்கமும் வரவேண்டும் என்றால் மனித உரிமை கண்காணிப்பிலும் விசாரணைகளிலும் சர்வதேச பங்களிப்பு அவசிய என அம்னெஸ்டி இண்டர்நேஷனல் கருதுகிறது.

# தேசிய மனித உரிமை கட்டமைப்பு வடிவம் (ஷரத்துகள் 2.3, 14.1)

பெரும்பாலான சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களில் இலங்கை கையொப்பமிட்டுள்ளது. எனவே அவற்றை மதித்து நடக்கவேண்டிய கடப்பாடும், மனித உரிமைகளை பாதுகாக்கவும் நிறைவேற்றவும் வேண்டிய கடப்பாடும் இலங்கைக்கு உள்ளது. பிரஜைகளின் அடிப்படை சுதந்திரங்களுக்கும், சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுதல் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கும் இலங்கையின் அரசியல் யாப்பு உத்தரவாதம் வழங்குகிறது.

இந்த உத்தரவாதஙள் எல்லாம் இருந்தும்கூட, அந்நாட்டில் பெருமளவில் மனித உரிமை மீறல்கள் நடந்துவருகின்றன என்பதை இந்த ஆவணம் விளக்குகிறது. பெரும்பாலான நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒழுங்கான நிவாரணம் மறுக்கப்படுவதற்கு அந்நாட்டி நீதிக் கட்டமைப்பில் ஆழமான பிரச்சினைகள் இருப்பதும் பெரிய தவறுகள் நடப்பதும், முக்கிய நிறுவனங்களுக்கு சுயாதீனமாக செயல்பட உரிமை இல்லாததும்தான் காரணம். தவிர துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகள் அரச படைகள் மீது எழும்போது நீதியை நிலைநாட்டும் அரசியல் உறுதிப்பாடு இல்லாதிருப்பதும் இதற்கு முக்கியக் காரணம். நாட்டின் நீதிக் கட்டமைப்பு எவ்வளவு பலவீனமாக உள்ளது என்பதை அந்நாட்டில் வழக்குகள் மிகுந்த தாமதமாகவே தீர்க்கப்படுவதை வைத்தும், 2012 நிலையில் 6,50,000 வழக்குகள் தீர்க்கப்படாமல் தேங்கிக்கிடப்பதை வைத்தும் புரிந்துகொள்ள முடியும்.[9]

## நீதித்துறை மற்றும் கண்காணிப்பு அமைப்புகள் சுயாதீனமாக செயல்படுதல்

நீதிபதி நியமனங்கள் அரசியல் நியமனங்களாக இருந்துவருவதால் நீதித்துறையின் சுயாதீனம் அச்சுறுத்தலுக்குள்ளாகிறது. இலங்கை அரசியல் யாப்பின் 18ஆவது சட்டத்திருத்தம் (18ஆவது சட்டத்திருத்தம் என்று மட்டும் சொல்லப்படும்) ஒரு "அவசர சட்ட மசோதா"[10] மூலமாக 2010 செப்டம்பர் 8ஆம் தேதி கொண்டுவரப்பட்டது. நாட்டின் முக்கிய பொது சேவை பதவிகள், தலைமை நீதிபதி, மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் உள்ளிட்ட மூத்த நீதிபதிகள், நீதித்துறை நியமனங்கள், நீதித்துறை அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்களின் நிர்வாகத்துக்கு பொறுப்பான

நீதித்துறை சேவைகள் ஆணையம் உறுப்பினர்கள் போன்றவர்களை நேரடியக நியமிக்கவும், பதவியகற்றவும் இந்த சட்டத்திருத்தம் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.[11]

2013ல் தலைமை நீதிபதியை முறைதவறி நடந்ததாக குற்றஞ்சாட்டி இலங்கை அரசு பதவி விலக்கிய நேரத்தில் நாடு முன்னெப்போதுமில்லாத அரசியல் யாப்பு பிரச்சினை ஒன்றை எதிர்கொண்டது. தலைமை நீதிபதியை பதவி அகற்ற முன்னெடுக்கப்பட்ட நடைமுறை அரசியல் யாப்பிற்கு முரணானது என நாட்டின் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தும் அவர் பதவி நீக்கப்பட்டிருந்தார்.[12] மனித உரிமை மீறல் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாகவும்., அமைச்சர்களின் சில திட்டப் பிரேரணைகளுக்கு எதிராகவும் நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்கிய பின்னணியில் பிநீதித்துறைக்கும் நாட்டின் நிறைவேறு அதிகாரிகளுக்கும் முறுகல் நிலை மாதக்கணக்கில் முற்றி வந்த சூழலில் தலைமை நீதிபதியின் பதவிநீக்கம் வந்தது. தலைமை நீதிபதியை பதவியகற்ற அரசாங்கம் திட்டமிடுகிறது என்று தெரியவருவதற்கு முன்பிருந்தே, நீதித்துறை சுதந்திரமாக செயல்படுவதில் அரசாங்கம் தலையிடுகிறது என குற்றஞ்சாட்டி சட்டத்தரணிகளும் நீதிபதிகளும் அதிருப்தி வெளியிட்டு வந்தனர்.

நீதிபதிகளின் சுதந்திர செயல்பாட்டை மதிப்பது என்ற பொதுப் பிரகடனம் ஒன்றை உருவாக்கி அதனை இலங்கை அரசாங்கம் மதித்து கடைப்பிடித்தல்தான் இலங்கையில் நீதித்துறை மீண்டும் சுயாதீனமாக செயல்படுவதை உறுதிசெய்ய முடியும். அரசாங்கத்தின் பல்வேறு மட்டத்திலும் இவ்விஷயம் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பது உறுதிசெய்யப்பட வேண்டும். தவிர நீதிபதிகளின் நியமிக்கப்படுவது மற்றும் கண்காணிகப்படுகின்ற விஷயத்தில் நிர்வாக ரீதியான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

தேசிய பொலிஸ் ஆணையம் (NPC), பொதுசேவைகள் ஆணையம் (PSC), நீதித்துறை சேவைகள் ஆணையம் (JSC) போல நாட்டில் மனித உரிமை பேணப்படுவதற்கு அவசியமான முக்கிய ஆணையங்களின் நியமனத்தில் அரசியல் தலையீடு இல்லாதிருப்பதை பேணுவதற்காக 2001ல் ஒரு சர்வகட்சி அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தது. அரசியல் யாப்பு கவுன்சில் என்ற இந்த அமைப்பை கலைக்கின்ற வேலையையும் 18ஆவது சட்டத்திருத்தம் செய்திருந்தது. உதாரணத்துக்கு, பொலிஸ் அதிகார்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் பதவி நீக்கங்கள் ஆகியவற்றை

மேற்பாற்வையிடும் பொறுப்பு NPCக்குதான் இருந்தது. ஆனால் அதன் இந்த அதிகாரங்கள் 18ஆவது சட்டத்தால் பறிக்கப்பட்டிருந்தன. ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்படுகின்ற பொலிஸ் மா அதிபரிடம் இந்தப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. பொலிஸ் அதிகாரிகள் மீதான பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெற்று விசாரித்து நிவாரணம் வழங்கும் பொறுப்பு மட்டுமே NPCயிடம் தற்போது இருந்துவருகிறது.

இவ்வகையான ஆணையங்கள் மீண்டும் சுயாதீனமாக செயல்படுவதற்கு இலங்கை அரசு ஆவண செய்ய வேண்டும் என LLRC பரிந்துரைத்திருந்தும் அது சம்பந்தமாக இதுவரை எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

நீதித்துறை மற்றும் நாட்டின் முக்கிய ஆணையங்கள் சுதந்திரமாக செயல்பட மீண்டும் அனுமதி தந்து, நாட்டில் மனித உரிமையை பாதுகாப்பதற்காக 18ஆவது சட்டத்திருத்தம் ரத்து செய்யப்பட வேண்டும் என அம்னெஸ்டி இண்டர்நேஷனல் பரிந்துரைக்கிறது.

## அடிப்படை உரிமைகள் வழக்குகள்

இலங்கையில் அரசியல் யாப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ள உரிமைகள் மீறப்பட்டிருந்தால் அது சம்பந்தமான முறைப்பாடுகளை நேரடியாக நாட்டின் உச்சநீதிமன்றத்தில் தொடுக்கலாம்.[13] வழக்கு விசாரணையின்றி நெடுங்காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் தமது எதேச்சதிகார தடுபுக்காவலை எதிர்த்து இந்த வழிமுறையில் நிவாரணம் தேட முயன்றிருக்கிறார்கள். சித்ரவதைக்கு ஆளானவர்கள் பொலிசாருக்கு எதிராக இவ்வகையான மனுக்களை தாக்கல்செய்ததுண்டு. ஆனால் மனித உரிமை மீறல்களுக்காக முழுமையாக பலனளிக்கவல்ல தீர்வாக இந்த வழிமுறையை கூறிவிடமுடியாது. இந்த மனுக்களை விசாரிக்கும்போது உச்சநீதிமன்றம் ஒரு குற்றவியல் நீதிமன்றமாக செயல்படுவதில்லை. தவிர பாதிக்கப்பட்டவருக்கு நஷ்ட ஈடு வழங்குவது, (மிக அரிதாக) குற்றமிழைத்தவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கச் சொல்லி உரிய அதிகாரிக்கு உத்தரவிடுவது என்ற அளவிலேயே உச்சநீதிமன்றத்தின் நிவாரணமும் அமைந்துள்ளது. ஆனால் இவ்வகையான முறைப்பாடுகளை மனித உரிமை மீறல் நடந்து ஒரு மாதத்துக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை உள்ளது. மேலும் இந்த வழக்கு அதிக காலம் எடுக்கக்கூடியதாகவும், அதிகம் செலவு ஆகக்கூடியதாகவும் உள்ளது. இந்த மனுக்களை தொடுத்துவிட்டு அது முடிகிற வரையில் வழக்கை முன்னெடுக்கின்ற

ஆதாரம் ஒரு சிலருக்கே இருக்கிறது. கொழும்பில்தான் முறைப்பாடுகளை செய்ய வேண்டும் என்பதால் தூரத்தில் வாழ்பவர்களுக்கு இந்த முறையில் நிவாரணம் தேடுவது மிகவும் சிரமம்.[14] சில வழக்குகளில், துஷ்பிரயோகங்களை எதிர்கொண்டவர்களுக்கு அரசு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்குகின்ற நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது என்றாலும், பொதுவாக சிறிய தொகைகள்தான் நஷ்ட ஈடுகளாக வழங்கப்பட்டுள்ளன.[15] மனுதாரருக்கு ஆதரவாக உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்றாலும் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லை. அடிப்படை மனித உரிமை வழக்குகளில் அடையாளம் காணப்பட்ட சந்தேக நபர்கள் எதிராக சட்ட மா அதிபர் அலுவலகம் சட்ட நடவடிக்கை எடுக்கும் என்ற அவசியம் இல்லை. மனித உரிமை மீறல்கள் ஏற்பட்ட நடவடிக்கைக்கு பொறுப்பானவர்கள் என்று அடையாளம் காணப்பட்டிருந்த சில அதிகாரிகள் தொடர்ந்து பதவியில் நீடிக்கும் நிலை இருந்துவருகிறது, சில சமயங்களில் அந்த அதிகாரிகளுக்கு பதவி உயர்வும் கிடைத்துள்ளது.[16]

## இலங்கை மனித உரிமைகள் ஆணையம்

இலங்கையில் அரசியல் சாசனம் உத்தரவாதம் அளிக்கின்ற உரிமைகள் மீறப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படும்போது அவற்றை விசாரிக்கவும், நிலைமையைக் கண்காணிக்கவுமான பொறுப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணையத்துக்கு (SLHRC) உள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அரசாங்கம் செய்ய வேண்டிய விஷயங்களைப் பரிந்துரைப்பதும் இதன் கடமை. சர்வதேச மனித உரிமை விதிகள் மற்றும் தர அளவுகோல்களுக்கு ஏற்ப இலங்கையின் தேசிய சட்டங்களும், நிர்வாக நடைமுறைகளும் அமைந்துள்ளனவா என்று உறுதிசெய்வதும் இவர்களது பொறுப்புதான்.

மனித உரிமை ஆணையத்தின் சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அதற்கான நியமனங்களை அனைத்து கட்சியினரையும் உள்ளடக்கிய அரசியல் சாசன மன்றத்தின் வழியாகத்தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை இருந்துவந்தது. ஆனால் அந்த அரசியல் யாப்பு விதியை மீறி இலங்கை ஜனாதிபதி மனித உரிமைகள் ஆணையத்துக்கு நேரடியாக நியமனங்களை செய்திருந்தார். இதனையடுத்து மனித உரிமைகள் பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்குமான தேசிய அமைப்புகளை ஒருங்கிணைக்கும் சர்வதேச கமிட்டியானது, பாரிஸ் ஒப்பந்தக் கொள்கைகளுக்கு பொருந்தாத வகையில் SLHRC இருப்பதால், 2007ல் அதனை தகுதிக் குறைப்பு செய்து பி(கண்காணிப்பாளர்) என்ற மட்டத்திற்கு இறக்கியிருந்தது.[17] SLHRCயால் சுதந்திரமாக

செயல்பட முடியாது என்ற அதன் தகுதியை 18ஆவது சட்டத்திருத்தம் உத்தியோகபூர்வமாகவே ஊர்ஜிதம் செய்துவிட்டது ஏனென்றால் ஜனாதிபதியின் நேரடிக் கட்டுப்பாட்டில் SLHRC கொண்டுவரப்பட்டது.

இலங்கை தனது ஐந்தாவது அறிக்கையில் வேறு விதமாக வாதிட்டாலும்,[18] SLHRC ஒரு சுதந்திரமாக செயல்படக்கூடிய சுயாதீன அமைப்பு அல்ல. மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டவர்களுக்கு பலனளிக்கவல்ல நிவாரணம் அளிக்க அவர்கள் நம்பிச் செல்லக்கூடிய வழிமுறையாக SLHRC செயல்பட வழியில்லாமல் இருக்கிறது. இலங்கை மனித உரிமை ஆணையத்தின் பரிந்துரைகள் கூடுதலாக மதித்து நடக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் இலங்கை மனித உரிமை ஆணையச் சட்டத்துக்கு (1996ஆம் ஆண்டின் 21ஆவது சட்டம்) சில திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதியிடம் SLHRC கேட்டுக்கொண்டது.[19] இருந்தபோதிலும் SLHRCயின் பரிந்துரைகளை அரசு அதிகாரிகள் கூடுதலாக நடைமுறைப்பத்தும் விதமாகவோ, SLHRCயின் சுதந்திரத்தை வலுப்படுத்தும் விதமாகவோ இலங்கையில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

## ஹேபஸ் கார்பஸ் - ஆட்கொணர்வு மனு

இலங்கையில் ஆட்கள் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போனது, சித்ரவதை செய்யப்பட்டது, பிற துஷ்பிரயோகங்களுக்கு ஆளானது போன்றவறைத் தடுப்பதற்கான பலனளிக்கவல்ல தீர்வாக பொதுவாக ஆட்கொணர்வு மனுக்கள் இருக்கவில்லை. நீளமான நீதிமன்றத் தாமதங்கள், நீதிமன்றங்களோடு ஒத்துழைக்க தடுப்புக்காவல் அதிகாரிகள் தவறுவது, சாட்சிகளும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தலுக்கு ஆளாவது, உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கபடும் அதிகாரிகள் கேட்டுக்கொள்கிறார்கள் என்பதற்காக வழக்குகள் தொலைதூர நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுவது, நடமாட்ட சுதந்திரம் தனிமனிதருக்கு உண்டு என்பதை வலியுறுத்த நீதிமன்றம் தவறுவது போன்ற காரணங்களால் ஆட்கொணர்வு மனு பலன் தராத நிலை இருந்துவருகிறது.[20]

**2009 மே மாதம் முல்லைத்தீவில் இராணுவத்தினரிடம் சரணடைந்து அங்கிருந்து இராணுவ பேருந்துகளில் கொண்டுசெல்லப்பட்டிருந்த தமது உறவினர்களைக் காணவில்லை என்று கூறும் குடும்பத்தார், காணாமல் போனவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விவரம் கேட்டு வவுனியா மேல்நீதிமன்றத்தில் 2013 ஆகஸ்ட் 26ஆம் தேதியன்று ஹேபஸ் கார்பஸ் ஆட்கொணர்வு மனுக்களை**

தாக்கல் செய்தனர். அதில் ஒரு பெண்மணி, தனது மகள், மருமகன், அவர்களின் மூன்று சிறுபிள்ளைகளையும் இலங்கை இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவின் பொறுப்பில் வைத்து தான் கடைசியாக பார்த்திருந்ததாக முறையிட்டிருந்தார். 2013 செப்டம்பர்ல் இது சம்பந்தமாக ஆரம்ப விசாரணை ஒன்றை துவங்கும்படி மேல்நீதிமன்றம் மாவட்ட நீதிமன்றத்துக்கு உத்தரவிட்டது. வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி வி.சந்திரமணி, இராணுவத்தின் தலைவருக்கும், முல்லைத்தீவிலுள்ள 58ஆவது படைப்பிரிவின் தலைமை அதிகாரிக்கும் நோட்டீஸ்களை அனுப்பியிருந்தார். இந்த வழக்கின் விசாரணை திரும்பத் திரும்ப ஒத்திப்போடப்பட்டு வந்துள்ளது. ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்திருந்த குடும்பங்கள் 2014 ஜூன் 5 ஆம் தேதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டங்களைச் செய்தனர். தங்கள் மனுக்கள் மீதான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என அவர்கள் கோரினர். இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வதற்காக குடும்பத்தார் முல்லைத் தீவு செல்வதை இராணுவத்தினர் தடுக்க முற்பட்டனர் என இதில் பங்கேற்ற எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூறுகின்றனர். அதே ஜூன் 5ஆம் தேதியன்று, வேறொரு போட்டி ஆர்ப்பாட்டமும் நடந்திருந்தது. விடுதலிப் புலிகளால் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போன பிள்ளைகள் எங்கிருக்கிறார்கள் எனக் கேட்டு அவர்தம் குடும்பத்தினர் செய்த ஆர்ப்பாட்டம் அது. ஜூலை 21 மற்றும் ஆகஸ்ட் 25 ஆகிய தேதிகளில் இந்த ஹேபஸ் கார்ப்பஸ் மனுக்கள் மீது விசாரணை நடந்த போதும் இந்த போட்டி ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

# விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு எதிராக நடந்த மோசமான விதிமீறல்கள் (பிரிவுகள் 6, 7, 8, 9, 10)

2009ல் யுத்தம் முடிவுக்கு வந்த பிற்பாடு, விடுதலைப் புலிகள் அமைப்பில் "ஒரே ஒரு நாள்" சேர்ந்திருந்தவராக இருந்தாலும் அவர்கள் அனைவருமே "புனர்வாழ்வு" பெறுவதற்காக சரணடைய வேண்டுமென இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது.[21] சரணடைந்தவர்கள் விசாரிக்கப்பட்டு தடுத்துவைக்கப்பட்டனர். சிலர் கொல்லப்பட்டிருந்தனர். பலர் சரணடைய பயப்பட்டனர். தன்னை நம்பி குடும்பம் உள்ளது என்ற நிலையில் இருந்தவர்கள் சரணடையாமல், சிவிலியனாக வாழ வேண்டிய அவசியம் இருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்போடு தமக்கு தொடர்பு இருந்ததை சொல்லத் தவறிய ஆட்களை தேடிப் பிடிக்கின்ற வேலையை இலங்கையின் உளவுத்துறையினர் தொடர்ந்து செய்துவந்துள்ளனர். கைதுசெய்யப்படுபவர்கள் தடுப்புக்காவலில் மிகக் கடுமையான முறையில் அதிகாரிகளால் நடத்தப்பட்டதாக அம்னெஸ்டி இண்டர்நேஷனலிடம் பேசிய முன்னாள் கைதிகள் தெரிவித்திருந்தனர்.[22] சித்ரவதை, பாலியல் வன்முறை உள்ளிட்ட கட்டமைப்பு ரீதியான திட்டமிட்ட துஷ்பிரயோகங்களை சரணடையத் தவறிய முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் அல்லது வெளித்தெரியாமல் விடுதலைப் புலிகளுடன் தொடர்பில் இருந்தவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் பாதுகாப்பு படையினர் தொடர்ந்தும் இழைத்துவருவதாக பாதிக்கப்பட்டவர்கள் அம்னெஸ்டி இண்டநேஷனலிடம் முறையிட்டு வந்துள்ளனர்.[23]

விடுதலைப் புலிகளோடு சம்பந்தப்பட்டிருந்தவர்களின் குடும்பங்கள் 2009 மே மாதத்தில் முல்லைத்தீவில் சரணடைந்தபோது அவர்கள் இராணுவ பேருந்துகளில் ஏற்றப்பட்டு கொண்டுசெல்லப்பட்டார்கள் என்றும் அதன் பின்னர் அவர்களின் கதி என்ன ஆனது என்று தெரியவில்லை என்றும் LLRCயிடம் வாக்குமூலம் அளித்த சாட்சிகள் பலர் கூறியிருந்தனர். உதாரணத்துக்கு, 2010 நவம்பரியில் அரியாலையில் LLRCயிடம் வாக்குமூலம் அளித்த பெண்ணொருவர், மே 18 ஆம் தேதி தனது கணவர்

சரணடைந்தபோது அவர் ஏற்றப்பட்டிருந்த பேருந்தில் 50 பேருக்கும் அதிகமானோர் இருந்ததாக மதிப்பிடுவதாக கூறினார்.[24] இப்படியாக ஆட்கள் ஏற்றப்பட்ட 16 பேருந்துகளை தான் கண்டதாக இன்னொருவர் தெரிவித்திருந்தார். காணாமல்போன ஆட்களில் விடுதலைப் புலிகள் அமைப்பில் உயர் மட்டத்தில் இருந்தவர்கள் அடங்குவர். அவர்களுடைய இயக்கப் பெயர்களை வைத்து சாட்சிகள் அவர்களை குறிப்பிட்டிருந்தனர்: இளம்பரிதி, குமரன், ரூபன், வேலவன், புலிகளின் கவிஞரான புதுவை ரத்தினதுரை, கல்விப் பிரிவைச் சேர்ந்த பேபி சுப்பிரமணியம், ஒரு சமயத்தில் விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரதிநிதியாக இருந்த லாரன்ஸ் திலகர் உள்ளிட்டோர். கந்தவளாயில் ஆணையாளர்கள் முன்னால் வாக்குமூலம் அளித்த பெண்ணொருவர், விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த தனது மருமகன் கத்தோலிக்கப் பாதிரியார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மே 18 ஆம் தேதி சரணடைந்தார் என்றும், அவரது மனைவியான தனது மகளும் அவர்களது பிள்ளைகளும் சரணடைந்தார்கள் என்றும், அப்பிள்ளைகளில் ஒன்று பாலகன் என்றும் கூறினார்.[25] தற்போது காணாமல்போயுள்ள பல விடுதலைப் புலி உறுப்பினர்கள் அந்நேரத்தில் சரணடைந்ததை தாம் கண்டதாகவும் அம்னெஸ்டி இண்டர்நேஷனலிடம் பேசிய சாட்சிகள் கூறியிருந்தனர்.

"முன்னாள் போராளிகளை மனிதாபிமானத்துடன் நடத்தியதாக" ஐந்தாவது அறிக்கையில் இலங்கை கூறியிருந்தது. தொழிற் பயிற்சி, ஆற்றுப்படுத்தும் உளவியல் பயிற்சி, "புனர்வாழ்வு பெறவும், சமூகத்தோடு மீண்டும் சேர்ந்து வாழவுமான" உதவிகள் போன்றவற்றை வழங்கியதாக அது கூறியது.[26] இலங்கையால் பாதுகாக்கப்பட்ட தங்குமிடங்கள் மற்றும் புனர்வாழ்வு மையங்கள் (PARCs)[27] என்று அழைக்கப்பட்ட இடங்களில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நபர்களிடம் அம்னெஸ்டி இண்டர்நேஷனல் விசாரித்தபோது, தங்களுக்கு பயனுள்ள பயிற்சிகளோ, ஆலோசனைகளோ வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் மாறாக பல்வேறு உளவுப் பிரிவினர் வந்து தங்களை நெடிய விசாரணைகளுக்கு உட்படுத்தியதே நடந்தது என்றும், அச்சயமம் தாங்கள் அடிவாங்கியும் சித்ரவதைகளுக்கு உள்ளாகியும் இருந்ததாக தெரிவித்திருந்தனர்.

**2009 மே மாதம் இராணுவத்திடம் சரணடைந்த பின்னர், வெளிக்குளம் பாதுகாக்கப்பட்ட தங்குமிடம் மற்றும் புனர்வாழ்வு மையம் என்று உத்தியோகபூர்வமாகச் சொல்லப்படும் தடுப்புக்காவல் மையத்தில் 12 மாதங்கள் இருக்க வேண்டி வந்திருந்த ஒருவர் அம்னெஸ்டி இண்டர்நேஷனலிடம்**

**பேசியிருந்தார். "சுற்றி இரும்பு முள்வேலி போடப்பட்ட அந்த திடலை புனர்வாழ்வு மையம் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கு எவ்வித புனர்வாழ்வும் வழங்கப்படவில்லை. மாறாக சித்ரவதையும், கடுமையாக நடத்தப்பட்டதென்பதும்தான் அங்கு நடந்தது. உதாரணத்துக்கு, பயங்கரவாத தடுப்பு பிரிவான TID பொலிசார் ஒவ்வொருவராக அழைத்து ஒருவருக்கு ஐந்தாறு மணிநேரம் என விசாரணை செய்வார்கள். இப்படியாக ஒவ்வொருவராக அவர்கள் விசாரிக்க ஒரு மாதம் வரைக்கும் எடுக்கும். நான்காவது மாடி (கொழும்பில் உள்ள குற்றப் புலனாவுப் பிரிவான CID பொலிசார் வந்து கேள்விகள் கேட்பார்கள். (ஒருவர் சொல்லும் பதில் பிடிக்கவில்லை என்றால்) கொறடை வைத்து கை விரலை நசுக்குவார்கள், விதையை அழுத்துவார்கள். என்னோடு தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் ஒருவரின் பல்லை பிடுங்கினார்கள். சில நேரம் ஆட்களைப் பேச வைக்க வேண்டும் என்பதற்காக மதுவைக் குடிக்கவைத்து விசாரிப்பார்கள்.[28]**

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் பாதுகாப்பு படையினரால் தொடர்ந்தும் கண்காணிக்கப்பட்டு, அச்சுறுத்தப்பட்டு, வேவுபார்க்கப்பட்டு வருவதால், அவர்களுடைய நடமாட்ட சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் போன்றவை இன்றளவும் பாதிக்கப்பட்டுள்ளன. சமூகத்தில் ஒன்றிணையவும், பொருளீட்ட ஒரு வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும் இது ஒரு தடையாகவே இருந்து வருவதாக அம்னெஸ்டி இண்டர்நேஷனல் விசாரித்திருந்த சாட்சிகள் தெரிவித்துள்ளனர்.[29] யுத்தம் முடிந்த காலம் தொட்டே பாதுகாப்பு படையினரால் தாம் மீண்டும் மீண்டும் கைதுசெய்யப்பட்டு, பாலியல் துன்புறுத்தல், பாலியல் வன்புணர்ச்சி மற்றும் பிற வன்முறை போன்ற துஷ்பிரயோகங்களை எதிர்கொண்டுவருவதாக முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களான ஆண்கள் மற்றும் பெண்கள் பலர் அம்னெஸ்டி இண்டர்நேஷனலுக்கு தெரியப்படுத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததாக சந்தேகிக்கப்பட்டதால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்கள், குறிப்பாக சித்ரவதைகளை எதிர்கொண்டிருந்தவர்கள், தடுப்புக்காவலில் தாம் அனுபவித்த கொடுமைகள் ஏற்படுத்திய உடல் மற்றும் உள பாதிப்புகளின் விளைவாக சமூகத்தில் ஒன்றிணைந்து இயல்பாக வாழ்வதில் பெரிய சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

# பெண்களுக்கு எதிரான வன்முறை (பிரிவுகள் 2.1, 3,6, 7)

இலங்கையில் ஆயுத மோதல்கள் நடந்துவந்த நேரத்தில் பாலியல் வன்புணர்ச்சி, பிற வகையான பாலியல் வன்முறை மற்றும் துஷ்பிரயோகங்களை அரச படைகள் செய்திருந்ததாக அம்னெஸ்டி இண்டர்நேஷனலினால் விசாரிக்கப்பட்டிருந்த பெண்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர். பெண்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்த சமயங்களிலும், தமிழ் பெண்கள் பாதுகாப்பு படையினரின் வீச்சில் வந்திருந்த நேரங்களிலும் இப்படியான துஷ்பிரயோகங்கள் நடந்ததாக அவர்கள் கூறுகின்றனர். யுத்தம் முடிந்த பின்னரும்கூட பெண்களுக்கு எதிராக இப்படியான குற்றங்கள் இழைக்கப்பட்டு வந்துள்ளன, குறிப்பாக பொலிஸ் தடுப்புக்காவல், இராணுவத் தடுப்புக்காவல் என்று வருகின்ற நேரத்தில் இவை நடந்துள்ளன. பெண்கள் ஆண்கள் என இருபாலாரையுமே சித்ரவதை செய்யும்போது பாலியல் துஷ்பிரயோகம் என்பது அதில் ஒரு பொதுவான அம்சமாக இருந்துள்ளது. வெவ்வேறு சூழ்நிலைகளில் பெண்கள் அதிகாரிகளுடைய வீச்சில் வரும்போது இவ்விதமான துஷ்பிரயோகங்கள் தொடர்ந்தும் நடந்துவந்துள்ளதாகத் தெரிகிறது.

**இளம் வயதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்திருந்த 52 வயது தாய் ஒருவரை அம்னெஸ்டி இண்டர்நேஷனல் விசாரித்திருந்தது. வட இலங்கையில் நடந்திருந்த சண்டைகளில் இருந்து இந்தப் பெண்ணும் அவரது பிள்ளைகளும் உயிர்பிழைத்திருந்தனர். 2010ஆம் ஆண்டு வடக்கில் ஒரு சோதனைச் சாவடியில் இவர் குற்றப் புலனாய்வுப் பிரிவு CID பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு வவுனியாவில் உள்ள ஜோசஃப் முகாமுக்கு விசாரணைக்காக கொண்டுசெல்லப்பட்டிருந்தார். இவர் நிர்வாணமாக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டு, விசாரணையாளர் ஒருவருக்கு பலவந்தமாக வாய்ப் புணர்ச்சி செய்யவைக்கப்பட்டிருந்தார். முகாமிற்கு தான் கொண்டுசெல்லப்பட்டபோது அந்த இடத்தில் வேறு நான்கு பெண்கள் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள் என்று அவர் தெரிவித்தார். அங்கு விசாரணை என்பது உளவுத் தகவல் சேகரிக்கும் நோக்கத்துக்காக மட்டும் நடக்கவில்லை என்று தான் சந்தேகிப்பதாக அவர் கூறினார். "எங்களோடு பலவந்தமாக உறவுகொள்ள வேண்டும், திருப்தி ஏற்படும் வரையில் எல்லா வக்கிரங்களையும்**

எங்களிடம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தான் அவரிடம் தெரிந்தது. விசாரணைக்கு என்று சொல்லி கூட்டிச்செல்வார்கள், ஆனால் திரும்பி வரும்போது பாதி உயிர்தான் இருக்கும்."[30] ஒரு வார காலம் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் உறவுக்காரர் ஒருவர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து அப்பெண்ணை வெளியில் எடுத்திருந்தார்.

2011ல் அம்னெஸ்டி இண்டர்நேஷனலால் விசாரிக்கப்பட்டிருந்த மூத்த பெண் ஒருவர், 2009ல்  தானும் மற்றவர்களும் இலங்கைப் படையினரிடம் "சரணடையச் சென்றபோது" (விடுதலைப் புலி கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வெளியே வர அனுமதி கேட்டபோது), சிப்பாய்கள் தன்னையும் மற்ற பெண்களையும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதோடு, ஒருவரை சட்டத்துக்கு அப்பாற்பட்ட தண்டனையாக தாம் கொன்றதை பார்க்க வைத்தார்கள் என்றும் கூறியிருந்தார்.

# பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் (பிரிவுகள் 9, 14)

இலங்கையில் யுத்தம் 2009ஆம் ஆண்டே முடிந்துவிட்டது என்றாலும், சட்டவிரோத தடுப்புக்காவல் நடைமுறைகள் என்னவோ யுத்த காலத்திலிருந்து இன்றளவும் தொடர்ந்து வரவே செய்கின்றன. பொதுவான குற்றவியல் நீதிக் கட்டமைப்பில் இதற்கு எதிராகவுள்ள பாதுகாப்பு அம்சங்களை அதிகாரிகள் மீறுகிற அல்லது உதாசீனப்படுதுகிற நிலைமை காணப்படுகிறது. சில நேரங்களில் எந்த சட்ட திட்டங்களுக்கும் உடன்படாமல் அவர்கள் செயல்படுகிறார்கள்.[31] ஆனால் பல சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு சட்டங்களைப் பயன்படுத்தி சந்தேகநபர்களை ஆதாரமோ நீதிமன்ற அனுதியோ இல்லாமல் அதிகாரிகள் கைதுசெய்து, நெடுங்காலங்களுக்கு அவர்களை முறையான குற்றச்சாட்டோ விசாரணையோ இல்லாமல் தடுத்துவைக்கின்றனர்.

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்

1971ஆம் ஆண்டு முதல் கிட்டத்தட்ட தொடர்ச்சியாகவே இலங்கையில் அமலில் இருந்துவந்த அவசர நிலையை அரசாங்கம் 2011 ஆகஸ்ட் 20ஆம் தேதியன்று விலக்கிக்கொண்டிருந்தது. அவசர நிலை இருந்தபோது அதிகாரிகள் பாதுகாப்பை முன்னிட்ட அவசர ஆணைகள் மூலமாக சகல விதமான எதேச்சதிகார விதிகளையும் ஏற்படுத்த முடியும் என்ற சூழல் இருந்தது. கருத்து சுதந்திரம் ஒன்றுகூடும் சுதந்திரம் போன்றவற்றை பறிக்கும் விதிகளும், நீதிமன்ற அனுமதி இல்லாமலேயே அவசர சோதனை நடத்தலாம், கைதுசெய்யலாம், முறையான குற்றச்சாட்டோ வழக்கு விசாரணையோ இல்லாமல் நெடுங்காலம் தடுத்துவைக்கலாம் என்பதற்கு இந்த விதிகள் இடமளித்தன. ஆனால் இப்போதும் அவசர நிலை இல்லையென்றாலும், அடக்குமுறை மிக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இன்னும் அமலில் உள்ளது. அவசரகால விதிமுறைகளில் இருந்த விதமான விதிகள் இந்த சட்டத்திலும் உள்ளன. நிர்வாக வசதிக்காக நெடுங்காலம் ஒருவரைத் தடுத்துவைப்பதென்பதை இந்த சட்டம் அனுமதிக்கிறது. விடுதலைப் புலி சந்தேகர்களை குற்றச்சாட்டோ வழக்கோ இன்றி தடுத்துவைப்பதற்குரிய புதிய விதிகளை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் (PTA) அதிகாரிகள் அறிமுகப்படுத்தியிருந்தனர் . சித்ரவதை செய்யப்பட்டதாகவோ பிறவகையில் மோசமாக நடத்தப்பட்டதாகவோ ஒருவர் குற்றஞ்சாட்டும்போது

அதனை நிரூபிக்கின்ற பொறுப்பு குற்றஞ்சாட்டுபவருக்கே உள்ளது என்று PTA கூறுகிறது. தவிர இந்த சட்டத்தின் மூலமாக கருத்து சுதந்திரத்தையும் ஒன்றுகூடும் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்த முடியும். [32]

PTA சட்டத்தால் மனித உரிமைகள் சூழலில் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றி ஐநா மனித உரிமைகள் குழு பல கலமாக கவலை வெளியிட்டு வந்துள்ளது. 1995ல் இலங்கையின் மனித உரிமை தொடர்பான மூன்றாவது மீளாய்வின்போது ICCPR ஒப்பந்தத்தின் ஷரத்துகளை மீறும் விதமான PTA விதிகள் குறித்து அக்குழு கவலைகள் தெரிவித்திருந்தது. 2003ல் நான்காவது மீளாய்வைச் செய்தபோதும் கவலைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன.[33] PTA சட்டம் தொடர்ந்தும் அமலில் இருந்துவருவது தொடர்பில் 2003ஆம் ஆண்டிலேயே ஐநா குழு அதிருப்தியும் கவலையும் வெளியிட்டிருந்தது.[34]

"பயங்கரவாதிகளுடனான சண்டைகள் முடிவுக்கு வந்துவிட்ட சூழ்நிலையில், PTA சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் மீது ஒன்று வழக்கை கொண்டுவருவது அல்லது அவர்களை விடுதலை செய்வது என்ற நோக்கில் அவர்களது கோப்புகளை மீளாய்வு செய்கிறோம்" என ஐந்தாவது மீளாய்வின்போது இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்தது.[35] ஆனால் PTA சட்டத்தின் கீழ் ஆட்களைக் கைதுசெய்து தடுத்துவைப்பதென்பது இன்றளவும் நீடித்துவரவே செய்கிறது. PTA சட்டம் மனித உரிமைகளுக்கு எதிரானது என்றுஐநா குழுவும் பிற அமைப்புகளும் தொடர்ந்து தெரிவித்துவரும் கவலைகளை ஏற்று ஆவண செய்ய இலங்கை தவறிவருகிறது. இந்த சட்டத்தை திருத்தவோ ரத்து செய்யவோ இலங்கை அரசு சம்மதிக்கவில்லை. மாறாக, PTA சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்களுக்கு கையாளப்படும் நடைமுறையும், பொதுவான குற்றவியல் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்களுக்கு கையாளப்படும் நடைமுறையும் ஒரே விதமானவைதான் என பொய்யாக வாதிட்டுவருகிறது.[36] உண்மையில் பொதுவான சட்டங்களின் கீழ் கைதுசெய்யப்படுவோர் நடத்தப்படும் விதத்துக்கும் PTA சட்டத்தின் கீழ் கைதாவோர் நடத்தப்படும் விதத்துக்கும் பெரிய வித்தியாசங்கள் உண்டு. கீழே விவரிக்கப்பட்டுள்ளதுபோல, கைதுசெய்யப்பட்ட 24 மணி நேரங்களில் (ஒரு சில சூழ்நிலையில் 48 நேரங்கள் வரை நீட்டிக்கலாம்[37]) ஒருவரை நீதித்துறை அதிகாரி முன்னால் ஆஜர் செய்ய வேண்டும், அந்த நீதித்துறை அதிகாரிதான் கைதியை தடுத்துவைக்க வேண்டுமான் என்பதை முடிவுசெய்ய வேண்டும் என்ற குற்றவியல் நடைமுறைச் சட்ட விதியை, PTA சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவருக்கு கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, PTA சட்டத்தின் கீழ்

கைதுசெய்யப்பட்டவரை மாதக்கணக்கில் வழக்கு விசாரணை இன்றியும், கைது நடவடிக்கையை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையிட வழியின்றியும் தடுத்துவைக்க முடியும்.[38]

PTA சட்டம் பிரிவு 9(1)ன் பிரகாரம், குற்றச்சாட்டு இல்லாமலேயே ஆட்களைக் கைதுசெய்யவும், பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து தடுப்புக்காவல் உத்தரவைப் பெறும் பட்சத்தில் 18 மாத காலம் வரையில் ஆட்களைத் தடுத்துவைக்கவும் முடியும். கைதுசெய்யப்பட்டவர் சட்டவிரோத செயல் எதிலும் ஈடுபட்டுள்ளாரா என்பதை பொலிசார் ஆராயும் வரை அவர் தடுப்புக்காவலிலேயே இருக்க வேண்டும்.

பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக் காவல் உத்தரவின்றி PTA சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படும் நபர்கள் 72 மணி நேரங்களுக்குள்ளாக ஒரு மஜிஸ்திரேட் முன்பாக ஆஜர் செய்யப்பட வேண்டும் என்று உள்ளது. ஆனால் அந்த கைது நடவடிக்கை சட்டப்படி சரியா என்று ஆராய்கிற அதிகாரம் மஜிஸ்திரேட்டுக்கு இல்லை. "வழக்கு முடிகிற வரை" தடுப்புக்காவலில் இருக்க வேண்டும் என உத்தரவிடுவதை மட்டுமே மஜிஸ்திரேட்டால் செய்ய முடியும். முதலில் அந்த நபருக்கு எதிராக முறையான குற்றச்சாட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் அப்போதுதான் தடுத்துவைக்க முடியும் என்று அந்த சட்டத்தில் இல்லை. எனவே இந்த சட்டத்தின் கீழ் ஆட்களை குற்றச்சாட்டோ விசாரணையோ இன்றி வருடக்கணக்கில் அதிகாரிகள் தடுத்துவைக்கிறார்கள். அதிகாரிகள் தமக்கு எதிராக வழக்கு கொண்டுவருவார்க என கைதிகள் தொடர்ந்து காத்திருக்க வேண்டியதுதான். ஆனால் மிக அரிதாகவே அந்த விஷயம் நடக்கும்.[39] இலங்கையின் நீதிக் கட்டமைப்பு பலவீனமாக இருப்பதால், PTA சட்டத்தின் கீழ் கைதிகளுக்கு எதிராக முறையான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்ட பின்னரும்கூட அவர்கள் நெடுங்காலத்துக்கு தடுத்துவைக்கப்படும் நிலை ஏற்படுவதுண்டு. 15 ஆண்டுகள் வரையில்கூட குற்றம் நிரூபிக்கப்படாமல் சிறையில் இருந்தவர்கள் இருக்கின்றனர்.[40]

PTA சட்டம் பிரிவு 10 , "பிரிவு 9ன் கீழ் வழங்கப்படும் ஒரு உத்தரவே இறுதியானது. அந்த உத்தரவுக்கு எதிராக வேறு எந்த ஒரு நீதிமன்றத்திலுமோ, தீர்ப்பாணையத்திலுமோ, ரிட் மனுவாகவோ அல்லது பிற வகையிலோ கேள்வி எழுப்ப முடியாது." என குறிப்பிட்டு சொல்கிறது.

ஒருவர் விடுதலை செய்யப்பட்ட பின்னருங்கூட அவரது நடமாட்ட சுதந்திரத்தையும், ஒன்றுகூடும் சுதந்திரத்தையும், கருத்து சுதந்திரத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய

கூடுதலான உத்தரவுகளை பாதுகாப்பு அமைச்சர் வழங்க முடியுமென, PTA சட்டத்தின் 11ஆவது பிரிவு கூறுகிறது. (குறிப்பிட்ட இடத்துக்கு செல்ல முடியாது, குறிப்பிட்ட இடத்தில் வசிக்க முடியாது, குறிப்பிட்ட அமைப்புகளில் அல்லது இயக்கங்களில் ஈடுபடக்கூடாது, பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாது என்பது போன்ற உத்தரவுகள அமைச்சர் வழங்க முடியும்.) இந்த உத்தரவுகளை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையீடு செய்ய முடியாது. பொலிஸ் அதிகாரி அல்லது பிற அரசு அதிகாரியிடம் அளிக்கப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலங்களும், பொலிஸ் தடுப்புக்காவலில் வழங்கப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலங்களும் சாதாரண குற்றவியல் வழக்கில் அனுமதிக்கப்பட்ட சாட்சியமாக அங்கீகரிக்கப்பட மாட்டாது என இலங்கையின் தடயவியல் அவசர உத்தரவுச் சட்டம் கூறுகிறது. ஆனால் இப்படியான ஒப்புதல் வாக்குமூலங்களை PTA சட்டத்தின் கீழ் நீதிமன்றம் சாட்சியமாக ஏற்றுக்கொள்கிறது. "சொல்லிக்கொடுத்து சொன்னாலோ, அச்சுறுத்தல் மற்றும் சலுகை வாக்குறுதிகளின்" காரணமாகவோ செய்யப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்கக்கூடிய தடயமாகாது. ஆனால் PTA சட்டத்தைப் பொறுத்தவர அந்த ஒப்புதல் வாக்குமூலம் நிர்பந்தித்து பெறப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டிய சுமையை பாதிக்கப்பட்டவரின் மீது சுமத்திவிடுகிறது. சித்ரவதை செய்யப்பட்டு பெறப்பட்ட வாக்குமூலம் அதனால் அதனை சாட்சியமாக கருதக்கூடாது என நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு பாதிக்கப்பட்டவருக்கே உள்ளது.[41]

# உயிர்வாழ்வதற்குள்ள உரிமை (பிரிவு 6)

## சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனைகள் மற்றும் தடுப்புக்காவலில் ஏற்படும் மரணங்கள்

உயிர்வாழ்வதற்கு ஒருவருக்குள்ள உரிமை அரச படைகளாலும், ஆயுதப் படைகளின் கீழ் செயல்படுகின்ற ஒட்டுக்குழுக்களாலும் மீறப்படுவதாகவும் அவர்கள் சட்ட விரோதமான முறையில் பலத்தை பிரயோகிப்பதாகவும் நம்பத்தகுந்த தகவல்களை இலங்கையிலிருந்து அம்னெஸ்டி இண்டர்நேஷனல் தொடர்ந்தும் பெற்றுவருகிறது. சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனைகள் மற்றும் தடுப்புக்காவலில் நிகழும் சந்தேகத்திற்கிடமான மரணங்கள் போன்றவை இதில் அடங்கும்.[42] இப்படியான சம்பவங்கள் பரவலாக நடந்துவருகின்றன, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதென்பதும் கிடையாது. ஒட்டுக்குழுக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்பட்டுவிட்டன என LLRCயிடம் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் அங்கே பொதுமக்கள் வழங்கிய சாட்சி வாக்குமூலங்கள் அதற்கு பொருந்திப்போவதாக இல்லை. ஒட்டுக்குழுக்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்தும் ஆட்கடத்தல்கள், கொலைகள் போன்ற வன்முறைகளில் ஈடுபடுவதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.[43]

பொலிசார், இராணுவத்தினர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (EPDP)உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் (UPFA) அங்கம் வகிக்கும் கருணா அணியினர் மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) உறுப்பினர்கள் போன்றோர் இப்படியான துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

அரச படைகளும் அவர்களோடு சேர்ந்து செயல்படுபவர்களும் ஈடுபடுகின்ற விதிமீறல்களைத் தடுக்க அரசாங்கம் போதிய நடவடிக்கை எடுப்பதில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது போதுமான அளவில் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது, ஒட்டுக்குழுக்களிடமும் அரசாங்கத்தில் அணிசேர்ந்துள்ள அரசியல் கட்சிகளிடமும் உள்ள ஆயுதங்களைக் களைவது போன்றவற்றைச் செய்ய அரசாங்கம் தவறிவருகிறது. சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனைகளை முறையாக விசாரிக்கவும், அக்குற்றங்களை செய்ததாக சந்தேகிக்கப்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கம் தவறிவருகிறது.

## தடுப்புக்காவலில் நிகழ்ந்த மரணங்கள்

2013 நவம்பருக்கும் 2014 மே மாதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் குறைந்தது ஆறு பெர் பொலிஸ் தடுப்புக்காவலில் சந்தேகத்திற்கு இடமான சூழலில் உயிரிழந்தனர். இவ்வகையான மரணங்கள் பலவற்றிற்கு பொலிசார் கொடுக்கும் விளக்கம் அதிர்ச்சியளிக்கும் அளவுக்கு ஒரே மாதிரியாக இருக்கும். 2013 நவம்பர் 16ஆம் தேதியன்று ஒரு பொலிஸ் காண்ஸ்டபிளும் அவர் மனைவியும் கொலைசெய்யப்பட்ட சம்பவத்தில் சந்தேகிக்கப்பட்டிருந்த நான்கு பேர் தடுப்புக்காவலில் இருந்தபோது இரண்டு வாரத்திற்குள் உயிரிழந்திருந்தனர். முதல் ஆள் நவம்பர் 22ஆம் தேதி இறந்திருந்தார். ஆயுதங்கள் பதுக்கி வைக்கப்பட்ட இடத்திற்கு கூட்டிச்சென்றபோது (கைவிலங்கிட்டிருந்தும்) பொலிசாரை அவர் தாக்க முயன்றதாகவும், பொலிசார் அவரை சுட்டுக் கொன்றதாகவும் பொலிசார் கூறியிருந்தனர். ஆயுதங்களை அடையாளம் காட்டுவதற்காக பொலிசார் கொண்டு சென்ற நேரத்தில் இரண்டு சந்தேகநபர்கள் ஏரி ஒன்றில் மூழ்கடிக்கப்பட்டு கொல்லப்பட்டதாக என்று தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இவர்கள் "தற்கொலை செய்துகொண்டார்கள்" என பொலிசார் கூறியிருந்தனர். முக்கிய சந்தேகநர் 2013 டிசம்பர் 3 ஆம் தேதி விசேட அதிரடிப் படையினர் (STF) நடத்திய எண்கவுண்டரில் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அந்த சந்தேகநபர் பொலிசார் மீது எறிகுண்டு ஒன்றை வீசியதால், திருப்பி சுட வேண்டி வந்ததாக பொலிசார் கூறினர். தடுப்புக்காவலில் நிகழும் மரணங்களுக்கு கடந்த காலங்களில் பொலிசார் எவ்விதமான விளக்கம் கொடுப்பார்களோ அதுவேதான் இப்போதும் கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த மரணங்கள் சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனை பாணியில் செய்யப்பட்ட ஆட்கொலைகள் எனத் தெரிவதாகவும் இலங்கையின் சட்டத்தரணிகள் சங்கம் டிசம்பர் 3ஆம் தேதி அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தனர்..44

## சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனைகள்

குடிநீரில் தொழிற்சாலைக் கழிவு கலந்திருப்பதை எதிர்த்து 2013 ஆகஸ்ட் 1ஆம் தேதி நிராயுதபாணிகளாக ஆர்பாட்டம் செய்திருந்த கிராமவாசிகளைக் கலைக்க பொலிசார் இயந்திரத் துப்பாக்கி கொண்டு சுட்டதில் மூன்று பேர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்தும் இருந்தனர்.45 வன்முறையிலிருந்து தப்பித்து தேவாலயம் ஒன்றில் அடைக்கலம் புகுந்திருந்த ஒருவரை பாதுகாப்பு படையினர் அடித்தே

**கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலைகள் பற்றி இராணுவம், பொலிசார், SLHRC ஆகிய தரப்புகள் விசாரணைகள் செய்தன. ஆனால் அதன் முடிவுகள் எதுவும் பொதுமக்கள் அறியும் வண்ணம் வெளியிடப்படவில்லை.**

## பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டவர்கள் காணாமல்போதல்

மனித உரிமை மீறல்களுக்கு எதிராக ஆர்ப்பட்டம் செய்ததால் அதிகாரிகளால் கொண்டுசெல்லப்பட்ட ஆர்வலர்கள் உட்பட பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு ஆட்கள் காணாமல் போவதாக அம்னெஸ்டி இண்டர்நேஷனலுக்கு தொடர்ந்து தகவல்கள் வந்துகொண்டுள்ளன. இப்படியான பல சம்பவங்களில், தீர்வு எதுவும் கிடைப்பதே இல்லை.[46] பொலிசாரும் இராணுவத்தினரும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இருந்த காலமான 2006 ஆண்டிலிருந்து[47], விசேட பிரிவைச் சேர்ந்தவர்கள் வெள்ளை வேனில் சென்று கடத்தல் பாணியில் ஆட்களை கைதுசெய்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள், அவர்தம் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர், பாதுகாப்பு படை உறுப்பினர்கள் போன்றோர் தெரிவித்து வந்துள்ளனர். இவ்வாறாக கொண்டு செல்லப்பட்டவர்கள் காணாமல்போனதும் உண்டு.[48]

பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டவர்கள் காணாமல்போவதை எதிர்த்து ஆர்ப்பட்டம் செய்த காணாமல் போன தமிழர்களின் குடும்பத்தார், அந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தவர்கள் போன்றோர் துன்புறுத்தப்பட்டும், தாக்கப்பட்டும், கைதுசெய்யப்பட்டும், அவர்களும் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போயும் இருந்தனர்.[49]

காணாமல்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட தற்காலிகமாக ஆணைக்குழுவுக்கு (The Presidential Commission on Disappearances) 1990 மே 10 முதல் 19 மே 2009 வரையான காலப்பகுதியில் செய்யப்பட்ட முறைப்பாடுகளை விசாரிப்பதற்கான அனுமதியே வழங்கப்பட்டிருந்தது. 2013 ஆகஸ்டில் இந்த ஆணைக்குழு உருவானதிலிருந்து குறைந்தது 14,000 முறைப்பாடுகள் பொதுமக்களிடம் இருந்து வந்துள்ளன. இராணுவத்தினர் காணமால்போனதாக முறையிட்டு சுமார் 5,000 முறைப்பாடுகள் வந்துள்ளன. 2014 ஆகஸ்ட் நிலவரப்படி, இந்த முறைப்பாடுகளில் 5 சதவீதத்துக்கும் குறைவாவை - அதாவது 462 முறைப்பாடுகளிலேயெ விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் சில சம்பவங்கள், பத்து ஆண்டுகளுக்கும் முன்பாக நடந்தவை. இவற்றை கூடுதல் விசாரணைகளுக்காக ஆராய்ந்துவருவதாக

ஆணைக்குழு தெரிவித்துள்ளது.[50] தவிர 2009 மே மாதத்திற்கு பிற்பாடு பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போனவர்கள் சம்பந்தமாக இந்த ஆணைக்குழுவால் விசாரிக்க முடியாது. 2014 ஜூலையில், இந்த ஆணைக்குழுவின் பணி வரம்பை விரிவுபடுத்தி, மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டது சம்பந்தமாகவும் இந்த ஆணையம் விசாரிக்கும் என ஜனாதிபதி ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார். அதற்கென உருவாக்கப்பட்ட ஒரு ஆலோசனைக் குழுவில் சர்வதேச சட்ட நிபுணர்கள் மூன்று பேரை அவர் நியமித்திருந்தார்.[51]

தற்போதைய ஐந்தாவது மீளாய்வு அறிக்கை உட்பட ஐநா குழு ஒவ்வொரு முறை மீளாய்வுசெய்யும்போது வெளிநாடுகளில் தஞ்சம் கோரியுள்ள இலங்கை பிரஜைகள் பற்றிய தகவல்களை (சாதாரணமாக இரகசியம் பேணப்பட வேண்டிய தகவல் இது) அந்தந்த நாடுகள் வெளியிட வேண்டும் என இலங்கை மறுபடியும் மறுபடியும் கேட்டுவந்துள்ளது. அப்போதுதான் "காணாமல்போனதாகத் தெரிவிக்கப்படுவோரின் எண்ணிக்கை பற்றி தங்களால் துல்லியமாக மதிப்பிட முடியும்"[52] என இலங்கை கூறுவது கொஞ்சமும் முறையில்லாத காரியம். வெளிநாடுகளில் அகதித் தஞ்சம் கிடைத்தவர்கள் இலங்கை திரும்பும்போது அவர்கள் தடுத்துவைக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்ட சம்பவங்கள் உண்டு. எனவே தஞ்சக் கோரிக்கையாளர் பற்றிய விவரங்களை ரகசியமாக வைக்கவேண்டும் என்பதன் அவசியம் வெளிப்படையாகவே தெரிகிறது.[53]

## மரண தண்டனை

ICCPR ஒப்பந்தத்தின் இரண்டாவது கட்டாயமற்ற கடப்பாட்டை இலங்கை கையொப்பமிட்டு ஏற்றுக்கொண்டிருக்கவில்லை அந்நாட்டில் மரண தண்டனை சட்டத்தில் தொடர்ந்து இருந்துவரவே செய்கிறது. அந்நாட்டில் மரண தண்டனைக்ளை நீதிமன்றங்கள் விதிப்பதுண்டு என்றாலும், 1976ஆம் ஆண்டு முதல் அங்கு எந்த ஒரு கைதிக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதில்லை. 2014 ஜனவரி 3ஆம் தேதி நிலவரப்படி,இலங்கையில் குறைந்தது 486 பேர் மரண தண்டனைக்காக காத்திருக்கிறார்கள் என சிறைத்துறை ஆணையாளரை மேற்கோள்காட்டி வருகின்ற ஊடகச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.[54]

# குற்றவியல் சட்டக் கட்டமைப்பின் வழியாக நடக்கும் துஷ்பிரயோகங்கள் (பிரிவுகள் 7, 9)

பொலிசாரும், குற்றப் புலனாய்வுப் பிரிவான CID, இராணுவம் மற்றும் கடற்படை உளவுப் பிரிவுகள், விசேட அதிரடிப் படையோடு சேர்ந்த பிரிவுகள் உள்ளிட்ட பிற அதிகாரிக்ளும், இராணுவத்தோடு சேர்ந்து செயலாற்றும் ஒட்டுக்குழுக்களும் சந்தேகநபர்களை உத்தியோகபூர்வமற்ற ரகசிய இடங்களில் அடைத்து வைத்து சித்ரவதை செய்வதாக, அவ்வாறான தடுப்புக்காவிலில் இருந்தவர்கள் தெரிவித்துவருகின்றனர்.[55] அதிகாரிகள் இதனை மறுத்தாலும் இவை நடப்பதாக புகார்கள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. 2013 வரையிலாவது இந்த வழக்கங்கள் நீடித்தன என்று காட்டும் வாக்குமூலங்களை முன்பு தடுத்துவைக்கப்பட்டவர்களிடம் இருந்து அம்னெஸ்டி இண்டர்நேஷனல் சேகரித்துள்ளது. 2009 முதற்கொண்டே அதிகாரிகளால் பித்துச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுபவர்கள் கணாமல்போயுள்ளது சம்பந்தமாக ஆயிரக்கணக்கான குடும்பங்கள் விவரம் தேடி வருகின்றனர்.

பொதுப் பாதுகாப்பு என்ற பெயரால் அதிகாரிகள் மிகப் பெரிய அளவில் ஆட்களுக்கு வலைவீசுவதுண்டு. கைதுசெய்வதிலும் தடுத்துவைப்பதிலும் ஒழுங்கான விதிமுறைகளை அதிகாரிகள் கடைப்பிடிக்கத் தவறுகின்றனர். பிடிஆணை இல்லாமல் கைதுசெய்வது, கைதுசெய்யும் அதிகாரி தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளாதது, எதற்காக கைதாகிறார் என சொல்லாமல் செய்வது, கைதி சட்டத்தரணியைச் சந்திக்க சந்தர்ப்பம் வழங்காமல் இருப்பது, ஆரம்ப விசாரணைக்குமேகூட சட்டத்தரணி வைத்துக்கொள்ள அனுமதி வழங்காதது, தடுப்புக்காவலை எதிர்த்து நீதிம்னறத்தில் முறையிட சந்தர்ப்பம் வழங்காதது, ஒருவர் கைதான விவரத்தை அவரது குடும்பத்தினருக்கு தெரியப்படுத்தாமல் இருப்பது போன்ற விஷயங்களை அதிகாரிகள் செய்கின்றனர். இவற்றின் காரணமாக கைதிகள் சட்ட ரீதியான உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் பாதுகாப்பு தேடவும் வழியில்லாது இருக்கிறது.[56] துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்காக கைதிகளின் உரிமை சம்பந்தமாய் அடுத்தடுத்த அரசாங்கள் கொண்டுவந்த விதிமுறைகள் நடைமுறையில் பின்பற்றப்படவே

இல்லை. தடுப்புக்காவலில் உள்ளவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் பிற நோக்கங்களுக்காகவும் 2006ல் ஜனாதிபதி ஏற்படுத்திய வழிகாட்டு விதிகள் பின்பற்றப்படவில்லை., 2007ல் மீண்டும் இவ்விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தும் அவை கடைப்பிடிக்கப்படவில்லை. ஒருவர் கைதுசெய்யப்படும்போது, அவர் தனது உறவுக்காரர்களையோ நண்பர்களையோ தொடர்புகொண்டு தான் எங்கிருக்கிறேன் என்பதைத் தெரியப்படுத்துவதற்கான உரிமை, கைதுசெய்யும் அதிகாரி தான் யார் தன் பதவி என்ன என்று தெரியப்படுத்துவதற்கு உள்ள பொறுப்பு, கைதுசெய்யப்படுபவரிடம் கைதுக்கான காரணங்களை அதிகாரிகள் தெரியப்படுத்துவதற்கு உள்ள பொறுப்பு போன்றவற்றை ஜனாதிபதியின் வழிகாட்டு விதிகள் வலியுறுத்தியிருந்தன.[57]

ஆனால் இப்படியான நிபந்தனைகளை பொலிசாரும் இராணுவத்தினரும் பெரும்பாலும் பின்பற்றுவதில்லை.[58] குற்றவியல் சட்டக் கட்டமைப்பு முழுக்கவுமே இந்தப் பிரச்சினை இருக்கிறது என்றாலும், தேசப் பாதுகாப்பு காரணங்களைக் காட்டி கைதுசெய்யப்படுவோருக்கு இந்தப் பிரசிச்சினை மிகவும் அதிகம். அம்னெஸ்டி இண்டர்நேஷனல் விசாரித்த பெரும்பாலான முன்னாள் கைதிகளுக்கு தன்னை யார் கைதுசெய்தது, தன்னை யார் விசாரித்தது என்ற பெயர், பதவி விவரங்கள் தெரிந்திருக்கவில்லை. கைதிகள் எங்கே தடுத்துவைக்கப்படுகின்றார்கள் என்ற விவரம் அவர்களுடைய உறவினருக்கு தெரியப்படுத்தப்படுவதில்லை. ஆரம்ப விசாரணையின்போது சட்டத்தரணி வைத்துக்கொள்ள முடியும் என்ற உத்தரவாதம் இலங்கையில் எந்த ஒரு கைதிக்குமே இல்லை.[59]

தேடப்படும் நபர்களின் உறவினர்கள், குறிப்பாக விடுதலைப் புலி அமைப்புடன் தொடர்புகொண்டிருந்ததாக சந்தேகிக்கப்படுபவர்களின் உறவினர்கள் கைதுசெய்யப்படுவது, அச்சுறுத்தப்படுவது, பலவந்தமாகக் கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போவது போன்றவற்றுக்கு உள்ளாகிறார்கள் என்றும், தேடப்படுபவர் வந்து சரணடைய வேண்டும் என்று அழுத்தம் தருவதற்காக இக்காரியங்கள் செய்யப்படுவதாகவும் ஏற்கனவே வந்த தகவல்களை உறுதிப்படுத்துவதாக 2014ல் முன்னாள் கைதிகள் அம்னெஸ்டி இண்டர்நேஷனலிடம் சொன்ன விஷயங்கள் அமைந்துள்ளன.[60] குற்றச்சாட்டு எதுவும் இல்லாமலே மாதங்கள் வருடங்கள் கணக்கில் தடுத்துவைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள், அதற்கு பிற்பாடும்கூட உளவுப் பிரிவினரால் கண்காணிக்கப்படும் நிலை உள்ளது. அவர்கள் வாரத்துக்கு ஒரு முறை அல்லது மாதத்துக்கு ஒரு முறையென பொலிசாரிடம் சமூகமளிக்க வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளது.[61] முன்னர் தடுத்துவைக்கப்பட்டவர்கள் துன்புறுத்தப்படுவதும், மீண்டும் கைதுசெய்யப்படுவதும்,

தாக்கப்படுவதும் உண்டு.[62] விடுதலை செய்யப்பட்ட கைதிகள் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போன சம்பவங்களும், கொல்லப்பட்ட சம்பவங்களும் நடந்துள்ளன.[63]

## சித்ரவதை மற்றும் மோசமாக நடத்தப்படுதல்

கைதிகள் சித்ரவதைக்கு ஆளாகுவதென்பதும், பாலியல் வன்முறை உட்பட பிற வகையில் மோசமாக நடத்தப்படுவதென்பதும் இலங்கையில் சர்வசாதாரணமாகவும் பரவலாகவும் நடந்துவரக்கூடிய விஷயங்களாக உள்ளன. குறிப்பாக ஒருவர் பிடிக்கப்படுகின்ற நேரத்திலும், வழக்குக்கு முன்பாக தடுத்துவைக்கப்படுகின்ற சமையத்திலும் இவை நடக்கின்றன. கைதியிடம் இருந்து விவரங்களைப் பெற வேண்டும் அல்லது ஒப்புதல் வாக்குமூலம் பெறவேண்டும் என்பதற்காகவோ அல்லது சந்தேகிக்கப்படும் விதிமீறல்கள் அல்லது குற்றத்தில் ஈடுபட்டதற்கு தண்டனை கொடுப்பதற்காகவோ இப்படியான துஷ்பிரயோகங்கள் செய்யப்படுவதாக, பாதிக்கபட்டவர்களின் வாக்குமூலங்களிலிருந்து அனுமானிக்க முடிகிறது.[64]

இலங்கையில் பெரியவர்களும் சரி சிறுபிராயத்தவரும் சரி தடுப்புக்காவலில் சித்ரவதை செய்யப்படுவதாக பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்தும் மனித உரிமை ஆர்வலகளிடம் இருந்தும் அம்னெஸ்டிக்கு தகவல் வந்துள்ளது. பாதுகாப்பு நடவடிக்கையின்போது கைதானவர்களுக்கும், சாதாரண குற்றச்சம்பவங்கள் தொடர்பான சந்தேகத்தின் பேரில் கைதானவர்களுக்குமேகூட சித்ரவதை நடந்துள்ளது.[65]

சித்ரவதை செய்யப்படுதல், கொடூரமாக, மனிதத்தன்மையற்ற, இழிவுபடுத்தும் விதமாக நடத்தப்படுதல் அல்லது தண்டிக்கப்படுதல் ஆகியவற்றை தடுப்பதற்கான ஐநாவின் விசேட அதிகாரி மன்ஃப்ரெட் நோவாக் இலங்கைக்கு 2007 ஒக்டோபரில் வந்தபோது, இலங்கையில் சித்ரவதை "பரவலாக நடந்துவருவதாக" கூறினார். "பொலிசார் அல்லது இராணுவத்தினர் ஈடுபடும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளில் சித்ரவதை ஒரு வழக்கமான விஷயம் என்றாகிவிட்டது" என அவர் கூறியிருந்தார்.[66]

சித்ரவதை வழமையாக நடந்துவருவதை இலங்கை அரசாங்கம் மறுத்துவந்துள்ளது, சித்ரவதைக்கு எதிராக குழு (CAT) அறிக்கையின் நிறைவுரையில் தெரிவிக்கப்பட்டிருந்த விஷயங்களுக்கு 2012 நவம்பர் 25ஆம் தேதி பதிலளித்த

இலங்கை அரசு, "சாதாரணமாக விசாரணைகளை நடத்தும்போது பொலிசார் சித்ரவதையையும் பிற மோசமான, மனிதத்தன்மயற்ற வழிமுறைகளையும் கைஅண்டு கைதியிடம் இருந்தோ சந்தேகநபரிடம் இருந்தோ ஒப்புதல் வாக்குமூலங்களை வாங்குகிறார்கள் என்பது ஆதாரமற்ற குற்றச்சாட்டு" என்று கூறியது. ஆனால் இலங்கையில் பொலிசாரும் பிற பாதுகாப்பு அதிகாரிகளும் ஆட்களை சித்ரவதை செய்தல், பிற கொடூரமான, மனிதத்தன்மையற்ற, இழிவுபடுத்தும் விதமாக நடத்துதல் போன்றவற்றில் ஈடுபடுவதாக அடிக்கடியும், தொடர்ச்சியாகவும் அம்னெஸ்டிக்கு புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றது.

**வட இலங்கையிலிருந்து அம்னெஸ்டியிடம் 2014 ஏப்ரலில் பேசியிருந்த ஆணொருவர், 2009க்கும் 2013க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் மூன்று தடவை உளவுத்துறையினர் தன்னை தடுத்துவைத்ததாகவும், ஒவ்வொரு முறையும் தான் சித்ரவதை செய்யப்பட்டிருந்ததாகவும் கூறினார். உடலில் மின்சாரத்தைப் பாய்ச்சுவது, சிகரெட் லைட்டர் வைத்து சுடுவது, மூழ்கடிக்கும் விதமாக மூச்சுத் திணறலை ஏற்படுத்துவது, கையையோ காலையோ கட்டி நெடுநேரம் தொங்கவிடுவது போன்ற சித்ரவதைகள் தனக்கு நடந்ததாக அவர் கூறுகிறார். ஒரு குச்சி ஆசன வாய்க்குள் செலுத்தப்பட்டதாகவும் பிற விதமான பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். தனது ஆசன வாயிலிருந்து இரத்தப் போக்கு இருந்ததாகவும், மெதுவாகத் தொட்டாலும் தாங்கமுடியாது என்ற அளவில் கால்களில் வலியிருந்ததாகவும் அவர் கூறினார். 2012ல் தன்னை அதிகாரிகள் தேடிய நேரத்தில் தன் அம்மாவை அவர்கள் பிடித்துச் சென்று தடுத்துவைத்ததாகவும், CID பொலிசாரின் தடுப்புக்காவலில்தான் அம்மா இறந்துபோனதாகவும் அம்னெஸ்டியிடம் அவர் கூறியிருந்தார்.**

**2010ல் தான் பதின்ம வயது யுவதியாக இருந்த நேரத்தில் கொழும்பில், சீருடை அணியாமல் வந்த CID பொலிசாரால் தான் கைது செய்யப்பட்டதாக இளம் பெண்ணொருவர் அம்னெஸ்டியிடம் கூறினார். ஒரு வேனில் தூக்கிப்போட்டுக்கொண்டு, வெளித்தெரியாமல் தடுத்துவைப்பதற்கான இடம் ஒன்றுக்கு தன்னைக் கொண்டுசென்று 10 நாட்கள் அடைத்துவைத்ததாக அவர் கூறினார். விடுதலைப் புலிகளுடன் தனக்கு தொடர்பு இருந்ததாக சந்தேகப்பட்டு தன்னை பொலிசார் சித்ரவதை செய்து விசாரித்ததாக அவர் தெரிவித்தார். அடித்து துன்புறுத்தப்பட்டது, சிகரெட் சூடு வாங்கியது போன்றவற்றை அவர் அனுபவித்துள்ளார். தான் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக மருத்துவர் ஒருவரிடம் அவர் தெரிவித்திருந்தார். துன்பம் அனுபவித்ததன் பின்னர் ஏற்படும்**

**மனக்கோளாறு, கடுமையான மன அழுத்தம் போன்றவை இவருக்கு இருந்ததாக மருத்துவ அறிக்கைகள் காட்டுகின்றன.**

தடுப்புக்காவலில் நடக்கும் துஷ்பிரயோகங்களை தடுக்கவும், புகார்களை விசாரிக்கவும், சித்ரவதை செய்ததாக சந்தேகிக்கப்படுபவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையும் சட்ட நடவடிக்கையும் எடுக்கவும் அரசாங்கத்திற்கு உறுதியான எண்ணம் இல்லாமல் இருப்பது இலங்கையில் சித்ரவதைகள் நீடிக்க முக்கியக் காரணமாக உள்ளது. சித்ரவதையை நிரூபிக்க வேண்டியது குற்றச்சாட்டுக்கு உள்ளானவரின் பொறுப்பு என்று கூறும் PTA சட்டம் தொடர்ந்து அமலில் இருப்பதும் பிரச்சினையை சிக்கலாக்குகிறது.

## எதேச்சதிகாரமான மற்றும் சட்டவிரோதமான தடுப்புக்காவல்

நிர்வாக வசதிக்காக ஆட்களைத் தடுத்துவைப்பது என்பது அமலாக்க அதிகாரிகளால் வழமையாக கைகொள்ளப்படும் விஷயமாகிவிட்டது. பாதுகாப்பு அச்சுறுத்தலாக ஆகக்கூடியவர்கள், ஆயுதக் குழுக்களுடன் தொடர்புடையவர்களாக சந்தேகிக்கப்படுபவர்கள் போன்றோருக்கு எதிராக இப்படியான கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தவிர அவர்தம் உறவினர்கள், உடன் வேலைபார்ப்பவர்கள், அரசாங்கத்தினை வெளிப்படையாக விமர்சிப்பவர்கள், மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட அரசாங்கத்தின் அரசியல் எதிராக பார்க்கப்படுபர்கள் போன்றவர்களும் இவ்வாறாக கைதுசெய்யப்படுகின்றனர்.[67] பெரியவர்களும் சரி, இளம் பிராயத்தினரும் சரி இவ்வாறு கைதுசெய்யப்படுகின்றனர். சிலருக்கு, வழக்கு விசாரணையற்ற தடுப்புக்காவல் என்பது வருடக் கணக்கில் செல்வதுண்டு. நிர்வாக வசதிக்காக கைதுசெய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் நெடுங்காலம் சிறையில் இருந்த நிலையில், போதிய ஆதாரம் இல்லாத காரணத்தால் விடுவிக்கப்படுவதுண்டு.[68]

அம்னெஸ்டி இண்டர்நேஷனல் முன்னாள் கைதிகளை விசாரித்த வகையில், இலங்கையில் பொலிசார், ஆயுதப் படையினர், சம்பந்தப்பட்ட உளவுப் பிரிவினர் என அனைத்து தரப்பும் இப்படியாக ஆட்களைக் கைதுசெய்து விசாரிப்பதுண்டு. LLRCயிடம் வாக்குமூலம் அளித்திருந்த சாட்சிகள், அரசாங்கத்தோடு சேர்ந்து செயல்பட்ட தமிழ் ஆயுதக் குழுக்களும்கூட, ஆட்களைப் பிடித்து, தடுத்துவைத்து, அதிகாரிகள் சார்பாக கேள்விகள் கேட்டு விசாரித்ததாக தெரிவித்தனர்.[69] முறையான குற்றச்சாட்டு எதுவும் இல்லாமல், கைதி எங்கிருக்கிறார் என்று வெளியில் சொல்லாமல், அவர்

வெளியுலகதை தொடர்புகொள்ள விடாமல் கைதிகளை அத்தரப்புகள் தடுத்துவைத்ததாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

**விடுதலைப் புலிகளால் பலவந்தமாக இயக்கத்தில் சேர்க்கப்பட்டிருந்த சிறுவன் ஒருவர் 2009 ஏப்ரலில் இலங்கை இராணுவத்தால் பிடிக்கப்பட்டு சித்ரவதை செய்யப்பட்டிருந்தார். வட இலங்கையில் உள்ள பல்வேறு தடுப்புக்காவல் மையங்களில் வெளியுலகுடன் எவ்விதத் தொடர்பும் இல்லாத வகையில் 18 மாதங்கள் அடைத்துவைக்கபட்டார். பின்னர் 2010 ஒக்டோபரில் கொழும்பு வெலிக்கடை சிறைக்கு மாற்றப்பட்டிருந்தார். கைதுசெய்யப்பட்ட நேரத்தில் அவருக்கு 17 வயதுதான். அவர் ஒரு முறைகூட மஜிஸ்திரேட் முன்பு கொண்டுசெல்லப்படவில்லை. முறையான குற்றச்சாட்டு எதுவும் அவர் மீது தெரிவிக்கப்படவில்லை.70**

மனித உரிமை அமைப்புகளுடன் தொடர்பாடக்கூடாது என்றும், தமது தடுப்புக்காவல் பற்றி வேறு வகையில் விவரம் வெளியிட்க்கூடாது என்றும் தாம் எச்சரிக்கப்பட்டதாக முன்னாள் கைதிகள் அம்னெஸ்டியிடம் தெரிவித்துள்ளனர். அப்படிச் செய்தால் மீண்டும் கைதுசெய்யப்படுவீர்கள் அல்லது கொல்லப்படுவீர்கள் என தாம் அச்சுறுத்தப்பட்டதாக அவர்கள் கூறுகின்றனர். கைதிகளை அடைத்துவைத்து விசாரிக்கவும் சித்ரவதை செய்யவும் ரகசிய இடங்களை பாதுகாப்பு படையினர் பயன்படுத்தியுள்ளனர். சில கைதிகள் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் உண்டு.[71]

PTA சட்டத்தைப் பயன்படுத்தி எதேச்சதிகார மற்றும் சட்டவிரோத கைதுகள் தொடர்ந்தும் நடந்துவருகின்றன. நிர்வாக வசதிக்காக நீதிமன்ற அனுமதி இல்லாமலும், தடயம் இல்லாமலும், முறையான குற்றச்சாட்டோ வழக்கோ இல்லாமலும் ஆட்களைத் தடுத்துவைக்க இச்சட்டம்ன் இடம்தருகிறது. சர்வதேச தர அளவுகோல்களை PTA சட்டம் மீறுகிறது என்பதற்கோ விதிமீறல்களுக்கு பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதற்கோ இலங்கையின் அரசாங்கத்திடம் இருந்து அங்கீகாரம் இல்லை. தவறான முறையில் ஆட்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட சில சம்பவங்களில், அரசியல் சாசனத்தால் உத்தரவாதம் வழங்கப்பட்ட கைதியின் உரிமைகள் மீறப்பட்டதற்காக பாதிக்கப்பட்டவருக்கு உச்சநீதிமன்றம் நஷ்ட ஈடு வழங்கியுள்ளது.

ஏற்கனவே சொன்னதுபோல, பாதுகாப்பு படையினர் ரகசிய தடுப்புக்காவல் இடங்களைப் பயன்படுத்துகிறார்கள் என தொடர்ந்தும் அம்னெஸ்டிக்கு புகார்கள்

வருகிறது. இந்த சூழ்நிலை சித்ரவதைகள் நடப்பதற்கான வாய்ப்பை அதிகரிக்கிறது. ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், 2011ல் CAT அமைப்பு தெரிவித்தவை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இன்னும் விசாரிக்கப்படவே இல்லை.[72] அப்படியான ரகசிய தடுப்புக்காவல் இடங்கள் இல்லை என இலங்கை அதிகாரிகள் வெறுமனே மறுப்பு தெரிவித்து வருகிறார்கள்.[73]

**வவுனியாவில் தடுப்புக்காவலில் இருந்தபோது லஞ்சம் கொடுத்து வெளியில் வந்தவர் ஒருவர் 2010 பிப்ரவரியில் மீண்டும் கைதுசெய்யப்பட்டு, கிழக்கு இலங்கையில் உள்ள ரகசிய தடுப்புக்காவல் மையம் ஒன்று தான் கூறும் இடமொன்றுக்கு அனுப்பப்பட்டிருந்தார். அங்கே தான் அடித்து துன்புறுத்தப்பட்டதாகவும், சித்ரவதை செய்யப்பட்டதாகவும், விடுதலைப் புலிகளுடன் தனக்கிருந்த தொடர்பு பற்றியும், போன முறை தான் விடுதலையான முறை பற்றியும் விசாரிக்கப்பட்டதாக அம்னெஸ்டியிடம் தெரிவித்தார். ஒரு மூன்று மாத காலம் பெரும் துன்பம் அனுபவித்த நிலையில், அதற்கு மேலும் அதனைத் தாங்க முடியாமல், அவ்விடத்தில் வேலைபார்த்த ஒருவர் உதவியுடன் அங்கிருந்து தப்பியுள்ளார். தடுப்புக்காவல் மையத்திலிருந்து சுவரேறிக் குதித்த பின்னர்தான் தெரிந்திருக்கிறது அந்த இடம் அடர்ந்த காடு ஒன்றில் இருந்துள்ளது. இரண்டு நாள் நடத்து, மரத்தடியில் உறங்கி தூர வந்த பின்னர்தான் அவருக்கு உதவி கிடைத்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ரகசிய தடுப்புக்காவல் மையம் இருந்ததாக அவர் அம்னெஸ்டி இண்டர்நேஷனலுக்கு தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் அதிகாரிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரின் பெயர் விவரமும் ஒரே இடத்தில் பதியப்படுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டதாகவும், கைதிகள் பற்றிய விவரங்களை குடும்பத்தார் தெரிந்துகொள்ள முடியும்ன் என்றும் ஐந்தாவது மீளாய்வின்போது இலங்கை ஐநாவில் தெரிவித்திருந்தது. ஆனால் TID பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிசாரினால்தான் இந்தப் பட்டியல் பேணப்பட்டு வருகிறது. பிற அதிகாரிகளால் கைதுசெய்யப்படுபவர்களின் விவரம் அதில் இருப்பதில்லை. 2011ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தப் பட்டியல் பற்றி அறிவிப்பு வரவில்லை. TID பொலிசாரை தொடர்புகொள்வதற்கான விவரங்களை இலங்கை காவல்துறை இணையதளத்திலிருந்து எளிதில் பெறக்கூடியதாகவும் இல்லை.[74]

# குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்கத் தேவையில்லாத சூழல் (பிரிவுகள் 2, 3, 6)

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் மற்றும் அதற்கு பிற்பாடான காலகட்டத்தில் சர்வதேச சட்டத்தின் கீழ் குற்றமாக அமையக்கூடிய செயல்களைச் செய்த அரச படைகள், துணைப் படையினர், அரசாங்கத்தினர் அல்லாதவர்கள் (குறிப்பாக விடுதலைப் புலிகள்) என எவருமே சட்டத்தின் பிடியில் சிக்கத் தேவையில்லாத சூழ்நிலை இருந்துவருவதை தடுக்க இலங்கை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவிலை. மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டவர்களுக்கு உரிய நேரத்தில், முறையாக, பலனளிக்கக்கூடிய நிவாரணங்கள் வழங்கப்பட்டதில்லை. குறிப்பாக, போர்க் குற்றச்சாட்டுகளும், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களாக அமையக்கூடிய சம்பவங்களும் குற்றஞ்சாட்டப்படும்போது அவற்றை சுயாதீனமாகவும், பக்கச்சார்பற்ற முறையிலும் விசாரிக்க இலங்கை அரசாங்கம் தவறிவந்துள்ளது. இக்குற்றச்சாட்டுகளை செய்தவர்களாக சந்தேகிக்கப்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதும் இல்லை.

குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளத் தேவையில்லை என்ற நிலைக்கு எடுத்துக்காட்டாக விளக்கும் முக்கிய சம்பவங்களில் விசாரணைகள் தொடர்ந்தும் தாமதமாகிக்கொண்டே போகின்றன. உதாரணத்துக்கு, 2006 ஆகஸ்டில் பட்டினிக்கெதிரான போராட்டம் (ACF)பிரஞ்சு தொண்டு நிறுவனத்தின் ஊழியர்கள் 17 கொல்லப்பட்ட சம்பவத்தில், இதுவரை எவருமே கைதுசெய்யப்படவில்லை. தவிர 2006 ஜனவரியில் திருகோணமலையில் 5 மாணவர்கள் கொல்லப்பட்ட வழக்கிலும் இதுவரை ஒருவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்விதமான வழக்குகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என LLRC பரிந்துரைத்திருந்தும் எதுவும் நடக்கவில்லை.

**விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை பாதுகாப்பு படைகளுக்கும் உக்கிரமான சண்டைகள் நடந்துவந்த சமயம் 2006 ஆகஸ்ட் 6ஆம் தேதி ACF பிரஞ்சு தொண்டு நிறுவன ஊழியர்கள் 15 பேர் மூதூரில் உள்ள அதன் அலுவலகத்தின் முன்னால் இருக்கும் புல்வெளியில் குப்புறக் கிடந்த நிலையில் சடலமாகக்**

கண்டெடுக்கப்பட்டிருந்தனர். அவர்களின் தலையிலும் கழுத்திலும் குண்டு பாய்ந்திருந்தது, தண்டனை நிறைவேற்றும் பாணியில் அருகில் வைத்து அவர்கள் சுடப்பட்டுள்ளனர் என்பதைக் குறிப்புணர்த்தின. ஆகஸ்ட் 8ஆம் தேதி கூடுதலாக இரண்டு ஊழியர்களின் சடலங்கள் அருகிலிருந்த ஒரு காரிலிருந்து கண்டெடுக்கப்பட்டது அவர்கள் தப்பிச் செல்ல முயன்றபோது சுடப்பட்டார்கள் என்பதைக் குறிப்புணர்த்தியது. மொத்ததில் ACF ஊழியர்கள் 17 பேர் ஆகஸ்ட் 5ஆம் தேதியோ 5ஆம் தேதியோ இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். இலங்கை ஆயுதப் படையினர் இதைச் செய்திருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்படுகிறது.75 ல் ஜனாதிபதி நியமித்த ஒரு2006 2006ல் ஜனாதிபதி நியமித்த ஒரு விசாரணைக் கமிஷன் இந்தக் கொலைகள் பற்றி பரிசீலித்திருந்தது. ஆனால் அந்த விசாரணைக் கமிஷன் சுதந்திரமாக செயல்பட போதிய அதிகாரம் வழங்கப்படவில்லை. சாட்சிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகளும் இல்லை. அந்த விசாரணைக் கமிஷன் ஜனாதிபதிக்கு இறுதியாக வழங்கிய அறிக்கை வெளியிடப்படவே இல்லை. ஆனால் அது பற்றி ஊடகங்களில் கசிந்த விவரங்களைப் பார்க்கும்போது, அரச படைகள் குற்றத்தில் சம்பந்தப்படவில்லை என்றும், அக்கொலைகளை விடுதலைப் புலிகள் செய்திருந்ததாகவும் விசாரணை முடிவுகள் சொல்லியிருந்ததாகத் தெரிகிறது. இந்த வழக்கை விசாரிப்பதாக இலங்கை சட்டமா அதிபர் அலுவல்கம் பலமுறை வாக்குறுதி அளித்திருந்தும், விசாரணையில் நிஜமான முன்னேற்றம் எதுவும் இல்லை. இந்த கொலைகள் பற்றி வெளியில் பேசக்கூடாது என தாம் பாதுகாப்பு படையினரால் கடுமையாக அச்சுறுத்தப்பட்டதாக இறந்துபோன ACF ஊழியர்களின் குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

"திருகோணமலை ஐவர்" வழக்கில், 2006 ஜனவரியில் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் விசேட அதிரடிப் படையினரான STF அதிகாரிகளால் சட்டத்துக்கு அப்பாற்பட்ட தண்டனை பாணியில் கொல்லப்பட்டிருந்தனர். சம்பவம் நடந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டபோதிலும், சாட்சிகள் கண் முன் நடந்திருந்தும் இந்தக் கொலைகளுக்குப் பொறுப்பானவர்கள் ஒருவர்கூட இன்னும் கைதுசெய்யப்படவில்லை. இந்தக் கொலைகள் சம்பந்தமாக நடந்த ஒரு விசாரணையில் விசேட அதிரடிப் படையினர் 12 பேர் 2013 ஜூனில் கைதுசெய்யப்பட்டிருந்தாலும் 2013 ஒக்டோபரில் அவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். அம்னெஸ்டி அறிந்தவரையில், இதுவரை நடந்த

**விசாரணையில் கட்டுப்பாட்டு அதிகாரி ஹெ.டி.கே.எஸ்.கபில ஜெயசேகரவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பரிசீலிக்கப்படவே இல்லை. நிறைய சாட்சிகளும், பல அறிக்கைகளும் சம்பவத்தின்போது இவர் இருந்தார் என்றும், கொலைகளுக்கு இவரே உத்தரவிட்டார் என்றும் கூறுகின்றன.76 இருந்தாலும் இவர் இன்னும் அதிகார நிலையிலேயே தொடருகிறார். பதவி உயர்வும் பெற்றுள்ளார்.**

2005 ஆகஸ்ட் 1ஆம் தேதிக்குப் பின்னர் நடந்த மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட (உடலகம) ஆணையத்தின் 2009அறிக்கையை அரசாங்கம் வெளியிடவே இல்லை. இந்த ஆணையம்தான் மேற்சொன்ன சம்பவங்களையும் வேறு சில மோசமான மனித உரிமை மீறல்களையும் விசாரித்திருந்தது. இதன் அறிக்கையை வெளியிடச்சொல்லி LLRC குறிப்பிட்டுப் பரிந்துரைத்திருந்தும் அது நடக்கவில்லை.

இலங்கையில் ஊடகவியலாளர் அல்லது மனித உரிமை ஆர்வலர் மீது நடந்த தாக்குதல்களில் எந்த ஒரு சம்பவத்திலுமே முறையான விசாரணையோ சட்ட நடவடிக்கையோ இல்லை.

"இலங்கையில் நல்லிணக்கத்தையும், பொறுப்புகூறலையும் மனித உரிமைகளையும் மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் ஐநா மனித உரிமை கவுன்சில் நிறைவேற்றிய 25/1 தீர்மானத்தின் அடிப்படையில் ஐநா மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் OHCHR நடத்துகின்ற விசாரணைக்கு ஒத்துழைக்கப்போவதில்லை என்று இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இலங்கையில் பொறுப்புகூறல் சம்பந்தமாக ஐநா தலைமைச் செயலருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு 2011 ஏப்ரலில் செய்த பரிந்துரைகளையோ, அல்லது LLRC செய்த முக்கியப் பரிந்துரைகளையோ செயல்படுத்தவும் இலங்கை அரசாங்கம் தவறிவருகிறது.

# கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுதல், ஒருங்கிணைந்து செயல்படுதல் சுதந்திரம் (பிரிவுகள் 19, 21, 22)

இலங்கையில் ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் போன்றோரை அரசு அதிகாரிகள் அச்சுறுத்திவருவதாகவும், தாக்குவது, கொலைமிரட்டல் விடுப்பது, அரசியல் உள்நோக்கத்துடனான பொய்க் குற்றச்சாட்டுகளை சுமத்துவது என துன்புறுத்திவருவதாகவும் அம்னெஸ்டிக்கு தொடர்ந்தும் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன. இப்படியான குற்றங்களை செய்பவர்கள் சட்டத்தின் பிடியில் சிக்கத் தேவை என்ற நிலைமையும் சர்வசாதாரணமாக இருந்துவருகிறது. கொலைகள், பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போதல் உள்ளிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் நபர்கள் போதுமான அளவில் விசாரிக்கப்படுவதென்பதும் இல்லை.

இதனால் பெரும் அழுத்தத்துக்கு உள்ளானது சிவில் சமூக அமைப்புகள்தான். "அரசு சாரா அமைப்புகள் எதுவும்" செய்தியாளர் சந்திப்புகளையோ, பயிற்சி அரங்கங்களையோ, ஊடகவியலாளர் பயிற்சிகளையோ நடத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் அறிக்கை வெளியிடுவதையும் நிறுத்த வேண்டும் எனவும் எச்சரித்து இலங்கை பாதுகாப்பு அமைச்சு 2014 ஜூலை 1ஆம் தேதி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது.

**புலனாய்வு செய்திகளுக்குப் பெயர்போன சண்டே லீடர் செய்தித்தாளின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க 2009 ஜனவரி 8ஆம் தேதி காலை கொழும்பில் உயர் பாதுகாப்பு பகுதியான ரத்மலான விமானநிலையத்துக்கு அருகில் உள்ள தனது அலுவலகத்துக்கு அருகாமையில் போக்குவரத்து நிறைந்த ஒரு சந்திப்பில் வைத்து பட்டப்பகலில் கொல்லப்பட்டிருந்தார். சம்பவம் நடந்து நான்கு ஆண்டுகள் ஆன பின்னரும், கொலையாளிகள் பிடிபடவில்லை. தனக்கு கொலை மிரட்டல்கள் வந்ததாக தான் படுகொலை செய்யப்படுவதற்கு முன்பாக**

விக்ரமதுங்க பலமுறை சொல்லியிருந்தார். 2006ல் ஜனாதிபதியிடமிருந்தே தனக்கு கொலைமிரட்டல் வந்ததாக அவர் சொல்லியிருந்தார்.77

காணாமல்போனவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆர்ப்பாட்டம் செய்வதில் உதவிக்கொண்டிருந்த வேளையில் அரசியல் ஆர்வலரான லலித் வீரராஜு மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போயிருந்தனர். மனித உரிமை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு அவர்கள் சென்றிருந்த வழியில் காணாமல்போனதாக உடன் பணியாற்றியவர்களும் குடும்பத்தினரும் கூறுகின்றனர். லலித் காணாமல்போன இரவு 11 மணிக்கு கொழும்பில் வாழும் அவரின் தந்தைக்கு கைத்தொலைபேசியில் நிறைய அழைப்புகள் வந்ததென்றும், லலித் யாழ்ப்பாணத்தில் தங்கினால் அவர் கொல்லப்படுவார் என அவற்றில் மிரட்டல் வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. குகன் வீட்டிலிருந்து சுமார் 5 கிலோமீட்டர் தொலைவிலுள்ள நீர்வெளி என்ற கிராமத்தில் வைத்து குகனும் லலித்தும், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வெள்ளை வேனில் வந்த கும்பல் ஒன்றினால் கடத்தப்பட்டதை சிலர் பார்த்திருந்தனர் என குகனின் அண்டை வீட்டுக்காரரர் ஒருவர் அவரது மனைவியிடம் 13 டிசம்பர் அன்று தெரிவித்துள்ளார்.78

பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போனவர்களுக்காக குரல்கொடுத்துவந்த பலேந்திரன் ஜெயக்குமாரி என்ற ஆர்வலர் வட இலங்கையிலுள்ள கிளிசொச்சியில் வைத்து 2014 மார்ச் 13ஆம் தேதியன்று தனது பதின்ம வயது மகளோடு சேர்த்து கைதுசெய்யப்பட்டிருந்தார். TID பொலிசாரால் பூசா சிறையில் இவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தினர். புரொபேஷன் மற்றும் சிறார் பராமரிப்பு சேவைகள் துறையிடம் ஜெயக்குமாரியின் மகள் ஒப்படைக்கப்பட்டிருந்தார். கொழும்பிலும் பூசாவிலும் TID அதிகாரிகள் சித்ரவதை செய்வதையும் கைதிகளை மோசமாக நடத்துவதையும் பெருமளவில் கைகொண்டுவந்துள்ளனர் என்பதை அம்னெஸ்டி ஆவணப்படுத்தியுள்ளது.79 துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றில் தேடப்படும் சந்தேகநபர் ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தார் என்று ஜெயக்குமாரி மீது இலங்கை அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர்ஆனால் அவர் அக்குற்றச்சாட்டை . நீதிமன்றத்தில் மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இனந்தெரியாத ஆட்கள் தன்னைப் பின் தொடர்கிறார்கள் என்றும் தான் அச்சத்தில் மூழ்கியுள்ளதாகவும் உள்ளூர் சிவில் சமூக குழுக்களிடம் சர்வதேச ஊடகங்களிடமும் ஜெயக்குமாரி

**கடந்த பிப்ரவரியிலேயே முறையிட்டிருந்தார்மனித உரிமை ஆர்வலர்களான . ருக்கி ஃபெர்ணாண்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் கசேசன் ஆகியோர் PTA சட்டத்தின் கீழ் TID பொலிசாரால் கிளிநொச்சியில் வைத்து மார்ச் ஆம் தேதி 16 யப்பட்டது கைதுசெய்யப்பட்டிருந்தனர். பலேந்திரன் ஜெயக்குமாரி கைதுசெய் விசாரிக்கப்பட வேண்டும், அவரது மகளின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குரல்கொடுத்ததை அடுத்து அவர்கள் கைதாகினர் 18 .மார்ச் அன்று அவர்கள் இருவரும் குற்றச்சாட்டு எதுவுமில்லாமல் விடுவிக்கப்பட்டார்கள் என்றாலும் அவர்கள் மீண்டும் கைதுசெய்யப்படவும் துன்புறுத்தப்படவும் இப்போதும் ஆபத்து உள்ளதுதங்களுக்கு நேர்ந்ததைப் பற்றி வெளியில் . சொல்லவும், வெளியிடங்களுக்கு செல்லவும் இவர்களுக்கு தடையும் விதிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிச்சூட்டு சம்பவம் ஒன்றில் தேடப்படும் சந்தேகநபர் ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தார் என்று ஜெயக்குமாரி மீது இலங்கை அதிகாரிகள் குற்றஞ்சாட்டினர். ஆனால் அவர் அக்குற்றச்சாட்டை நீதிமன்றத்தில் மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இனந்தெரியாத ஆட்கள் தன்னைப் பின் தொடர்கிறார்கள் என்றும் தான் அச்சத்தில் மூழ்கியுள்ளதாகவும் உள்ளூர் சிவில் சமூக குழுக்களிடம் சர்வதேச ஊடகங்களிடமும் ஜெயக்குமாரி கடந்த பிப்ரவரியிலேயே முறையிட்டிருந்தார். மனித உரிமை ஆர்வலர்களான ருக்கி ஃபெர்ணாண்டோ மற்றும் அருட்தந்தை பிரவீன் கசேசன் ஆகியோர் PTA சட்டத்தின் கீழ் TID பொலிசாரால் கிளிநொச்சியில் வைத்து மார்ச் 16ஆம் தேதி கைதுசெய்யப்பட்டிருந்தனர். பலேந்திரன் ஜெயக்குமாரி கைதுசெய்யப்பட்டது விசாரிக்கப்பட வேண்டும், அவரது மகளின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குரல்கொடுத்ததை அடுத்து அவர்கள் கைதாகினர். 18 மார்ச் அன்று அவர்கள் இருவரும் குற்றச்சாட்டு எதுவுமில்லாமல் விடுவிக்கப்பட்டார்கள் என்றாலும் அவர்கள் மீண்டும் கைதுசெய்யப்படவும் துன்புறுத்தப்படவும் இப்போதும் ஆபத்து உள்ளது. தங்களுக்கு நேர்ந்ததைப் பற்றி வெளியில் சொல்லவும், வெளியிடங்களுக்கு செல்லவும் இவர்களுக்கு தடையும் விதிக்கப்பட்டுள்ளது.80**

தமிழர்களின் கருத்து சுதந்திரத்தையும் ஒன்றுகூடும் சுதந்திரத்தையும் ஒடுக்கும் விதமான கட்டுப்பாடுகள், குறிப்பாக நாட்டின் வடக்கில் தொடர்ந்தும் விதிக்கப்படுகின்றன. விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படுபவர்கள் துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் கைதுகள் போன்றவற்றவற்றை பாதுகாப்பு படைகளிடம் இருந்து சந்திக்கின்றனர். ஒருவரின்

இனம், அவரது பூர்வீகம், வதிவிடம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர் துஷ்பிரயோகங்களை எதிர்கொள்வது அல்லது இரக்கம் காட்டப்படுவது என்று தீர்மானிக்கப்படுகின்ற நிலை இருந்துவருகிறது.

**புலனாய்வு செய்தி சேகரிப்பு சம்பந்தமாக சில பயிற்சி அரங்குகளை 2014 மையப்பகுதியில் டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நேஷனல் இலங்கை (TISL) வரிசையாக நடத்தியிருந்தது. இதில் பங்கேற்றவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகள்தான். கடைசி பயிற்சியரங்கு வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் பேசும் ஊடகவியலாளர்களுக்காக நடத்தப்பட திட்டமிடப்பட்டிருந்தது. நிறைய பாதுகாப்பு அச்சுறுத்தல்களைச் சந்திக்கும் ஊடகவியலாளர்கள் அவர்கள்தான். முதல் நாள் பயிற்சியரங்கு மே 22ஆம் தேதி நடந்திருந்த நிலையில், அதனை உடனடியாக பாதியிலேயே நிறுத்தச்சொல்லி உள்ளூர் இராணுவ அதிகாரிகளும் பாதுகாப்பு அமைச்சும் TISLலிடம் தெரிவித்திருந்தனர். காரணம் எதனையும் அவர்கள் தெரிவித்திருக்கவில்லை. தங்கியிருந்த விடுதியிலிருந்து கிளம்பச் சொல்லி TISL ஊழியர்களுக்கு அச்சுறுத்தும் விதமான அழைப்புகள் வந்திருந்தன. இந்தப் பயிற்சியரங்கு உள்ளூர் மக்களுக்கு பிடிக்கவில்லை என்பதால் நிறுத்தச்சொன்னதாக பிற்பாடு தெரிவிக்கப்பட்டது. பேச்சுவார்த்தை நடந்த பின்னர் இராணுவம் இறங்கிவந்தது என்றாலும், தமது இடத்தில் வைத்து பயிற்சி அரங்கு வேண்டாம் என விடுதி உரிமையாளர்கள் தெரிவித்துவிட்டதாக TISL கூறுகிறது. இந்த நிகழ்ச்சி ஜூனில் மறுபடியும் வேறு இடத்தில் நடத்த திட்டமிடப்பட்டது. ஆனால் ஜூன் 7ஆம் தேதி பயிலரங்கை நிறுத்தச் சொல்லி அதன் ஏற்பாட்டாளர்களுக்கும் கலந்துகொண்ட தமிழர்களுக்கும் பொலிசார் உத்தரவிட்டிருந்தனர். தேசிய ஒற்றுமை இயக்கம் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என கூறிக்கொண்டு வந்தவர்கள் பயிற்சியரங்கை நிறுத்தச்சொல்லி ஆர்ப்பாட்டம் செய்ததாக காரணம் கூறப்பட்டது. பயிற்சியரங்கம் தொடர்ந்து நடப்பதற்கு பாதுகாப்பு வழங்க பொலிஸ் தவறிவிட்டது. இதன் தொடர் நடவடிக்கைபோல, 2014 ஜூலை 1 ஆம் தேதி "அனைத்து அரசு சாரா அமைப்புகளுக்கும்" இலங்கை பாதுகாப்பு அமைச்சு சுற்றறிக்கை அனுப்பியது. அதில் சில அமைப்புகள் "தமக்கு அனுமதிக்கப்பட்ட வரம்பைத் தாண்டி, செய்தியாளர் கூட்டங்கள், பயிற்சி அரங்குகள், ஊடகவியலாளர் பயிற்சி வகுப்புகள், ஊடகச் செய்தியறிக்கைகள் போன்றவற்றை செய்வதாக" தெரிவிக்கப்பட்டிருந்தது."அப்படியான அனுமதியற்ற செயல்களைச் செய்வதை**

**அவர்கள் உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும்" என அதில் எச்சரிக்கப்பட்டிருந்தது.81**

வடக்கில் வாழும் தமிழர்கள் நீதிக்காக வெளிப்படையாக குரல்கொடுப்பதையும், போரில் இறந்தவர்களை நினைவுகூர்வதையும் துக்கம் அனுஷ்டிப்பதையும் இராணுவத்தினரும் பொலிசாரும் வலிந்து தடுத்துவந்துள்ளனர். யுத்தம் முடிவுக்கு வந்ததிலிருந்து குறிப்பாக இரண்டு தேதிகளில் வட இலங்கை மக்கள் யுத்தத்தில் இறந்தவர்களை ஒன்றுகூடி நினைவுகூர்வதை அதிகாரிகள் ஒடுக்கிவருகிறார்கள். ஒன்று மே 18ஆம் தேதி - இந்த தேதியில்தான் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெற்றி பெற்றதாக இலங்கை அரசு அறிவித்தது. மற்றது நவம்பர் 27ஆம் தேதி மாவீரர் தினம் - விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தில் இருந்து உயிர்விட்டவர்களை நினைவுகூர்ந்துவந்த நாள் இது. இந்த நாள்கள் நெருங்கும் சமயத்தில் தமிழர்களை இராணுவத்தினர் துன்புறுத்துவதாகவும், கைதுசெய்வதாகவும் பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்தும் மனித உரிமை ஆர்வலர்களிடம் இருந்தும் மீண்டும் மீண்டும் அம்னெஸ்டிக்கு புகார்கள் வந்துள்ளன. யுத்தத்தின்போது கொல்லப்பட்டவர்கள் அல்லது காணாமல்போனவர்களை நினைவுகூர்வதற்கும் அவர்களுக்காக குரல்கொடுப்பதற்கும் தடைகள் விதிக்கப்பட்டன, இடைஞ்சல்கள் ஏற்படுத்தப்பட்டன, கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன, அவற்றின் ஏற்பாட்டாளர்களும் பங்குகொண்டவர்களும் துன்புறுத்தப்பட்டும், தாக்கப்பட்டும், கைதுசெய்யப்பட்டு, அச்சுறுத்தப்பட்டும் இருந்தனர்.[82]

**2014 மே 16 முதல் 21 வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் அதிகரிகளின் உத்தரவின் பேரில் மூடப்பட்டது. யுத்தம் முடிவுக்கு வந்ததன் வருட நிறைவு தினமான மே 18 ஆம் தேதியை ஒட்டி, யாரும் போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தக் கூடாது என  யாழ் நகர மக்களுக்கும் அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். போஸ்டர்கள், கருப்புக்கொடி போன்றவற்றை வைப்பது, துண்டுப் பிரசுரம் கொடுப்பவர்களும் PTA சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுவார்கள் என்று அதிகாரிகள் கூறினர். வீடுகளுக்குள் தனிப்பட்ட முறையில் நினைவுச் சடங்குகளை நடத்த அனுமதிக்கப்பட்டது என்றாலும், "இரண்டு குடும்பங்கள் கூட ஒன்று கூடி நினைவுச் சடங்குகளை நடத்த அனுமதிக்கப்படாது, ஏனென்றால் இது பெரிய கூட்டமாக மாறி பெரிய நினைவு நிகழ்ச்சியாக உருமாறிவிடும்" என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய சொன்னதாக ஊடகங்கள் தெரிவித்தன.83**

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பெண்கள் விடுதியில் 2012 நவம்பர் 27 அன்று ஒரு விளக்கேற்றும் சடங்கு ஒன்றை பாதுகாப்புப் படையினர் கலைத்திருந்தனர். அதிகாரிகள் விளக்குகளை உடைத்ததாகவும், துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டது. மறுநாள், மாணவர்கள் நிசப்த ஆர்ப்பாட்டம் ஒன்றையும், சிறிய ஊர்வலம் ஒன்றையும் நடத்தியிருந்தனர். கருத்து சுதந்திரத்துக்கு எதிரான கட்டுப்பாடுகளைக் கண்டிக்கும் பதாதைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர். இளங்கலைப் பட்டத்துக்கு படிக்கும் மாணவர்கள் குறைந்தது இர்பது பேர் அப்போது கலவரக் கட்டுப்போலிசாராலும், சீருடை அணியாத அதிகாரிகளாலும் தாக்கப்பட்டு காயமடைந்திருந்தனர். மாணவர்கள் தம் மீது கல்லெறிந்ததால்தான், தாம் நடவடிக்கை எடுத்ததாக பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர். ஆனால் அதிகாரிகள் வந்து ஊர்வலம் செய்ன்றவர்களை தாக்குவதற்கு முன் எல்லாம் அமைதியாகத்தான் சென்றதாக பல்கலைக்கழக ஊழியர்கள் ஊடகவியலாளர்களிடம் சொன்னதாக தெரிவிக்கப்படுகிறது.84

# மத சுதந்திரம், கலாச்சார மற்றும் மத உரிமைகள் (பிரிவுகள் 18, 27)

ஒருவரின் மத சுதந்திரத்தை இலங்கையின் அரசியல் சாசனம் பாதுகாக்கிறது. ஆனால் நடைமுறையில் மத சுதந்திரம், கலாச்சார மற்றும் மத உரிமைகள் எல்லாம் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சிறுபான்மை சமூகங்களின் மத மற்றும் கலாச்சார ஒன்றுகூடல்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்படுகின்றன.

வட இலங்கையில், தமிழ் சமூகத்தில் இந்து மற்றும் கிறிஸ்தவர்களின் முக்கிய பண்டிகை நாட்களில் மதக் கடமைகளை தடையின்றி நிறைவேற்றுவதில் பிரச்சினையிருப்பதாக மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர். 2012 நவம்பர் 12ஆம் தேதி, இந்துக்களின் பண்டிகையான கார்த்திகையும் (தீபம் ஏற்றும் பண்டிகை) விடுதலைப் புலிகள் அமைப்பி இருந்து உயிர்விட்டவர்களை நினைவுகூறும் மாவீரர் தினமும் ஒரே நாளில் வர, யாழ்ப்பாணத்தில் மக்கள் சிலர் தங்கள் வீடுகளில் கார்த்திகைகாக ஏற்றியிருந்த தீபங்களையும் அணைக்கச்சொல்லி இராணுவம் உத்தரவிட்டதாக கூறப்படுகிறது. மன்னாரில்,இந்து ஆலயங்கள் அன்று மூடப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டிருந்தது. கிளிநொச்சியிலும் மன்னாரிலும் கிறிஸ்தவ பாதிரிமார்கள் திருப்பலி பூசைகளை நடத்த வேண்டாம் என பொலிசாரும் இராணுவத்தினரும் தெரிவித்திருந்தனர்.[85]

திருமணங்கள், இறுதிக்கிரியைகள், மஞ்சள் நீராட்டு விழா போன்ற குடும்ப நிகழ்ச்சிகளில்கூட மக்கள் கூடுவதற்கு முன் உள்ளூர் இராணுவ அதிகாரிகளின் அனுமதியைப் பெற வேண்டும் என இராணுவம் நிபந்தனை விதித்ததால், இப்படியான சடங்குகளை நடத்தவும், அவற்றில் கலந்துகொள்ளவும் மக்கள் தயங்க வேண்டியதாயிற்று.[86]

# சிறுபான்மையினரின் உரிமைகள் (பிரிவுகள் 2, 18, 26, 27)

தமிழர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மை இன, மத, மொழிச் சமூகங்களுக்கு பாரபட்சம் காட்டப்படுவதென்பது என்பது இலங்கையில் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்துவருகிறது. கருத்து சுதந்திரம், ஒன்றுகூடும் சுதந்திரம் போன்றவற்றில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதால் அதிக கஷ்டங்களைச் சந்திப்பது இலங்கையின் சிறுபான்மை சமூகங்கள்தான் (மேற்பிரிவைக் காண்க). சிறுபான்மைக் குழுக்கள் மீது மதவாத சக்திகள் வன்முறை அச்சுறுத்தல் விடுக்கும்போது சிறுபான்மையினரைக் காப்பாற்ற பொலிசார் தவறிவருகின்றனர். தப்பு செய்பவர்களை அடையாளம் காட்டும் புகைப்படங்கள் இருந்தும்கூட அவர்களை பொலிசார் கைதுசெய்யவில்லை.[87]

இலங்கையின் பெரும்பான்மை சிங்கள சமூகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் மத ரீதியான பதற்றங்களில் இருந்து ஆதாயம் தேடியிருந்தனர், அவற்றை பொய்யாக உருவாக்கியும் இருந்தனர். இவற்றால் சிறுபான்மையினரின் வழிபாட்டு இடங்கள், வியாபார மையங்கள் போன்றவை தாக்கப்பட்டிருந்தன. இப்படியான வன்முறைகள் பொதுவாக சட்ட நடவடிக்கை வராது என்ற தைரியத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கியமாக பொது பல சேனா (BBS)[88] உட்பட கடும்போக்கு பௌத்த தேசிய வாத அமைப்புகள் தலைதூக்கியுள்ளன. அரசாங்கத்தில் உயர் மட்டத்தில் உள்ளவர்களுடனும், ஆளுங்கட்சிக்கு நெருக்கமான அரசியல் குழுக்களுடனும் தொடர்புடையவை இந்த அமைப்புகள் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.[89] இலங்கையின் மதச் சிறுபான்மையினருக்கு எதிராகவும், அவர்களின் வழிபாட்டு இடஙளுக்கு எதிராகவும் ஆர்ப்பாட்டங்களையும், தாக்குதல்களையும் இக்குழுக்கள் நடத்தியுள்ளன. மனித உரிமை ஆர்வலர்கள், எதிர்க்கட்சி சிறுபான்மை சமூகத் தலைவர்கள், இலங்கையில் மனித உரிமை விஷயத்தில் பொறுப்புகூறல் வர வேண்டும் என குரல்கொடுக்கும் சர்வதேச பார்வையாளர்கள் போன்றோருக்கு எதிராக அச்சுறுத்தல்களையும், சேறு பூசும் பிரச்சாரங்களையும் இந்த கடும்போக்கு அமைப்புகள் மேற்கொண்டுள்ளன.

2013ஆம் ஆண்டில் மட்டும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களையும் அவர்தம் வழிபாட்டு இடங்களையும் இலக்குவைத்து இருநூறுக்கும் மேற்பட்ட

அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் வன்முறை சம்பவங்கள் நடந்துள்ளதாக முஸ்லிம் குழுக்கள் பதிவுசெய்துள்ளன. இவற்றில் 51 சம்பவங்களில் வன்முறை இடம்பெற்றுள்ளது.[90] 2014ல் இப்படியான தாக்குதல்கள் நீடித்தும், மோசமடைந்தும் இருந்தன. அலுத்கமவில் முஸ்லிம்கள் வாழும் பகுதி ஒன்றில் பெரிய வன்முறை நடந்ததில் அப்பகுதி மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருந்தனர் (கீழே விவரிக்கப்பட்டுள்ளது). அப்பகுதியில் வீடுகளும் வியாபார நிலையங்களும் அழிக்கப்பட்டிருந்தன. 2013 ஜனவரிக்கும் 2014 ஜூனுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இலங்கையில் கிறிஸ்தவர்களுக்கு எதிராக 32 வன்முறை சம்பவங்கள் உட்பட 131 அச்சுறுத்தல்கள் அல்லது தாக்குதல்கள் நடந்ததாக இலங்கை தேசிய கிறிஸ்தவ மதப்பிரச்சார கூட்டமைப்பு (NCEASL) கூறுகிறது. இவற்றில் 65 சம்பவங்களில் அரசு அதிகாரி மீது குற்றஞ்சாட்டப்படுகிறது - பெரும்பாலும், மத ஒன்றுகூடலைப் பாதுகாக்கத் தவறிய அல்லது மத நடவடிக்கையை நிறுத்தச் சொல்லிய பொலிஸ்காரர் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.[91]

**2014 ஜூன் 15ஆம் தேதி அலுத்கம என்ற ஊரில் BBS தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஒரு கூட்டத்தில் உசுப்பேற்றிவிடுவதுபோல பேசியதை அடுத்து முஸ்லிம்கள் எதிராக வன்முறை வெடித்திருந்தது. முஸ்லிம் இளைஞர்களுக்கும் பௌத்த பிக்கு ஒருவரின் ஆகன ஓட்டுநருக்கும் இடையே சிறு தகராறு நடந்து ஏற்கனவே மதரீதியாக பதற்றம் நிலவிவந்த சூழலில், அச்சம்பவத்துக்கு மூன்று நாட்களுக்குப் பின்னர் BBS கூட்டம் நடந்திருந்தது. அதிகாரிகளின் அனுமதியுடன் நடந்த அக்கூட்டத்தில் சிங்களத்தில் மோசமாகவும், இனத்தை இழிவுபடுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தியும் தேரர் உரையாற்றியிருந்தார். இனவெறியர்கள், தீவிரவாதிகள் போன்ற வார்த்தைகளை அவர் பயன்படுத்துவதையும், தங்களை எதிர்க்கும் அரசியல்வாதிகளை அவர் சாடுவதையும் அவ்வுரையின் வீடியோ பதிவு காட்டுகிறது.92 இலங்கையின் பொலிஸ் படையும் இராணுவமும் சிங்களர்கள் என்பதை வலியுறுத்தி அவர் மிரட்டியிருந்தார். " ஒரு முஸ்லிமோ அல்லது 'வெளியில் இருந்து வந்தவர்' வேறு எவருமோ சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் எவர் மீது கைவைத்தாலும் - அது பிக்குவாக இருக்க வேண்டிய அவசியமில்லை - எவர் மீது கைவைத்தாலும் அவர்கள் அனைவரின் கதையும் முடிந்துவிடும்" என தேரர் மிரட்டியிருந்தார். அதனை அடுத்து நடந்த**

வன்முறையில், குறைந்தது 4 முஸ்லிம்கள் கொல்லப்பட்டும், சுமார் 80 பேர் காயமடைந்தும் இருந்தனர். முஸ்லிம் வீடுகள், கடைகள், பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டிருந்தன.93 அலுத்கம, பெருவெல மற்றும் கொழும்பின் புறநகர்ப் பகுதியான தெஹிவெல உட்பட வேறு பல இடங்களிலும் தாக்குதல்கள் நடந்தன. முஸ்லிமால் நடத்தப்பட்ட மருந்துக்கடையின் வீடியோ பதிவுவைப் பார்க்கையில் கடை அடித்து நொறுக்கப்பட்டு தீவைக்கப்பட்டது தெரிகிறது. இந்த தாக்குதல்களின்போது பாதுகாப்பு படையினர் உடனிருந்து வேடிக்கை பார்த்தனர் என்றும், புகார் வந்தும் சிலர் மோசமாக காயம் அடையும் வரையில் சம்பவ இடங்களுக்கு அவர்கள் வரவில்லை என்றும் சாட்சிகள் இலங்கையின் மனித உரிமை ஆர்வலர்களிடம் தெரிவித்திருந்தனர். ஊடகங்களுக்கு தடை விதிக்கப்பட்டதால் பரவிய வன்முறை சம்பந்தமாக பொதுமக்கள் தகவல் பெறவும் வாய்ப்பில்லாமல் இருந்தது. மந்தமாகவும், குறைவாகவுமே இலங்கை அரசு நடவடிக்கை மேற்கொண்டது.94

# பரிந்துரைகள்

**இலங்கை அதிகாரிகள் பின்வருவனவற்றை செய்ய வேண்டும் என அம்னெஸ்டி இண்டர்நேஷனல் வலியுறுத்துகிறது:**

## தேசிய மனித உரிமை கட்டமைப்பு

- நீதித்துறையின் சுதந்திரத்தில் அரசியல் தலையீடு இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், நீதிபதிகள் நியமிக்கபடும் மற்றும் நிர்வகிக்கப்படும் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்யும் சட்ட நடவடிக்கைகளையும் கொள்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். நீதித்துறை சுதந்திரம் சம்பந்தமாக ஐநாவின் அடிப்படைக் கொள்கைகளுக்கு அமைய இவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- அரசியல் சாசனத்தின் 18ஆவது திருத்தம் ரத்துசெய்யப்பட வேண்டும். மனித உரிமைகளின் பாதுகாப்புக்குத் தேவையான முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தை குலைப்பதாக இந்த சட்டத் திருத்தம் இருந்துவருகிறது.

- இலங்கை மனித உரிமை ஆணையத்தின் சுதந்திரம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

- அடிப்படை உரிமை வழக்குகளிலும், ஆட்கொணர்வு மனு போன்ற ரிட் வழக்குகளில், கைதிகளை விடுவிக்கச் சொல்லியும் இலங்கையின் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் உட்பட அனைத்து நீதிமன்ற உத்தரவுகளையும் தாமதமின்றி நடைமுறைப்படுத்த வேண்டும்.

- ஐநாவின் விசேட நடைமுறைகளுக்கு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். எதேச்சதிகார தடுப்புக்காவலுக்கு எதிரான பணிக்குழு, பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு மற்றும் விருப்பத்துக்கு மாறாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போனவர்கள் சம்பந்தமான பணிக்குழு, சட்டத்துக்கு அப்பாற்பட்ட, வழக்கு விசாரணையற்ற, எதேச்சதிகாரமான மரண தண்டனைகள் சம்பந்தமான விசேட தூதர், மனித உரிமை ஆர்வலர்களின் நிலை தொடர்பான விசேட தூதர், கருத்து சுதந்திரம் அபிப்பிராய சுதந்திரம் போன்றவற்றின் பாதுகாப்புக்கும் மேம்பாட்டுக்குமான விசேட தூதர், நீதிபதிகள் மற்றும்

சட்டத்தரணிகளின் சுதந்திரம் சம்பந்தமான விசேட தூதர் போன்றோர் இலங்கை வர செய்திருந்த விண்ணப்பத்தை ஏற்று பதில் தர வேண்டும். இலங்கையில் அவர்கள் கட்டுப்பாடுகள் இன்றி பணியாற்ற இடம்தர வேண்டும்.

- ஐநா மனித உரிமை கவுன்சிலின் விசேட நடைமுகள் பிரிவு இலங்கை வருவதற்கு ஒரு அழைப்பு விடுப்பதன் மூலம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மேம்படுத்துவதிலும் இலங்கைக்கு அக்கறை இருப்பதை கோடிகாட்ட வேண்டும்.

- ஐநா மனித உரிமைக் குழுவுடைய அறிக்கையின் நிறைவுரையில் தெரிவிக்கப்பட்ட விஷயங்கள் உட்பட எல்லா ஐநா நிறுவனங்களின் பரிந்துரைகளையும் வெளிப்படையாகவும், பலனளிக்கும் விதமாகவும் நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான வழிமுறைகளையும் கட்டமைப்பையும் ஏற்படுத்த வேன்டும்.

## பெண்களுக்கு எதிரான வன்முறை

- இலங்கையின் பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்படும் சித்ரவதை மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் எவ்வளவு அதிமாக இருக்கிறது என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொண்டு, குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை வெளிப்படையாக எடுக்க வேண்டும்.

- இராணுவம் பொலிசார் என எந்த ஒரு அரசு தரப்பாலும் பாலியல் வன்முறை உட்பட பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நடப்பதைத் தடுக்க தெளிவான விதிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். கட்டளை அதிகாரிகள் உட்பட இராணுவத்திலும் பொலிசிலும் உள்ள அனைவருக்கும் இது சம்பந்தமாக கட்டாயப் பயிற்சி வழங்கப்பட வேண்டும்.

- பாலியல் வன்புணர்ச்சி, பாலியல் தாக்குதல் பொன்ற சம்பவங்களைத் தடுக்கவும், விசாரிக்கவும், சட்ட நடவடிக்கை எடுக்கவும் நிவாரணம் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- வன்முறையை எதிர்கொண்ட பெண்களுக்கு நீதியும் நிவாரணமும் கிடைக்க வழியுள்ளதா என்பது உறுதிசெய்யப்பட வேண்டும்.

## பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள்

- பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் PTA ரத்துசெய்யப்பட வேண்டும். நிர்வாக வசதிக்காக ஆட்களைத் தடுத்துவைக்கும் வழக்கம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

- அவசரகால விதிமுறைகள் உட்பட (அவற்றில் மட்டும் என்றில்லாமல் எல்லாவற்றிலும்) இலங்கையில் மேற்கொள்ளப்படும் எல்லா பாதுகாப்பு நடவடிக்கைகளிலும், நாட்டின் அனைத்து பயங்கரவாத தடுப்பு சட்டத்திலும், சர்வதேச மனித உரிமை விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது உறுதிசெய்யப்பட வேண்டும். எதேச்சதிகார கைது மற்றும் தடுப்புக்காவலுக்கும், சித்ரவதைக்கும் எதிரான தெளிவான விதிகள் அதில் அடங்கியிருக்க வேண்டும். இலங்கை மக்கள் அனைவரது கருத்து சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடும் சுதந்திரம் பாதுகாக்கப்படும் வகையில் அந்த சட்டங்கள் வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

## சித்ரவதை மற்றும் எதேச்சதிகார தடுப்புக்காவல்

- சித்ரவதை செய்யப்படுதல் மற்றும் பிற கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவுபடுத்தும் விதமாக நடத்தப்படுதல் அல்லது தண்டிக்கப்படுதலுக்கு எதிரான சர்வதேச ஒப்பந்தத்தில், கட்டாயமாக்கப்படாத பிரிவுகளையும் இலங்கை ஏற்றுக்கொண்டு நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

- சிறைகளிலும் தடுப்புக்காவல் மையங்களிலும் கைதிகள் மோசமாக நடத்தப்படுவதையும், சித்ரவதை செய்யப்படுவதையும் தடுக்கும் விதமான சட்டரீதியான பாதுகாப்பு அம்சங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். சித்ரவதை செய்யப்படுதல் மற்றும் பிற கொடூரமான, மனிதத்தன்மையற்ற அல்லது இழிவுபடுத்தும் விதமாக நடத்தப்படுதல் அல்லது தண்டிக்கப்படுதலுக்கு எதிரான ஐநாவின் விசேட தூதுவர் 2007ல் இலங்கை வந்து பார்வையிட்ட பின்னர் செய்த பரிந்துரைகளுக்கு ஏற்ப இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

- ரகசிய தடுப்புக்காவல் மையங்களில் நடப்பதாகத் தெரிவிக்கப்படுபவை உட்பட குற்றஞ்சாட்டப்படும் அனைத்து சித்ரவதை சம்பவங்களும் மோசமாக நடத்தப்பட்ட சம்பவங்களும் முறையாகவும் நியாயமாகவும் தாமதமின்றியும்

விசாரிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டும். கைதிக்கு எதிராக யார் விசாரணை செய்கிறார்களோ அவர்களே இந்த சித்ரவதை குற்றச்சாட்டை விசாரிக்கிறார்கள் என்ற நிலையில்லாமல் இவை சுயாதீனமாக விசாரிக்கப்பட வேண்டும்.

- கைதிகளை சித்ரவதை செய்ததாகவோ அல்லது பிறவகையில் மோசமாக நடத்தியதாகவோ குற்றங்காணப்படும் அரசாங்க அதிகாரி மீது குற்றவியல் நடவடிக்கையும், நிர்வாக ரீதியான நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட வேண்டும். சித்ரவதை செய்யப்பட்டதாக அல்லது இழிவாக நடத்தப்பட்டதாக ஒருவர் குற்றஞ்சாட்டும்போது அதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பை பாதிக்கப்பட்டவர் மீது சுமத்தாமல், சித்ரவதை செய்யவில்லை என்று அதிகாரிகள் நிரூபிக்க வேண்டும் என்பதாக சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும்.

- கைதிகளின் சித்ரவதையையும் துஷ்பிரயோகத்தையும் தடுக்கும் விதமான அனைத்து சட்டங்கள், விதிமுறைகள், வழிகாட்டு உத்தரவுகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள், சித்ரவதைக்கு எதிரான ஒப்பந்தச் சட்டம், கைதுசெய்யப்பட்டோ தடுத்துவைக்கப்பட்டொ இருக்கும் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஜனாதிபதியின் வழிகாட்டு உத்தரவு போன்றவை இதில் அடங்கும். இந்த சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை பெறவேண்டும் என்பதற்காக பொலிசாருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் முழுமையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்ன், இவற்றை மீறுபவர்கள் முறைப்படி கண்டிக்கப்படவும் திருத்தப்படவும் வேண்டும்.

- சித்ரவதைக்கு ஆளானவர்கள் மற்றும் பிறவகையில் மோசமாக நடத்தப்பட்டிருந்தவர்களுக்கு முழுமையான மற்றும் பலனுள்ள நிவாரணம் வழங்கப்படுவது உறுதிசெய்யப்பட வேண்டும். இழப்பை மீட்டுக்கொடுத்தல், நஷ்ட ஈடு வழங்குதல், புனர்வாழ்வு அளித்தல், திருப்திதரக்கூடிய ஏற்பாட்டை செய்துகொடுத்தல், திரும்பவும் நடக்காது என்ற உத்திரவாதம் வழங்குதல் போன்ற நிவாரணம் அளிக்கப்பட வேண்டும்.

- வழக்கு நடப்பதற்கு முன்னதாக தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு முறையாகவும் தடையின்றியும் சட்டத்தரணியைச் சந்திக்க இடமளிக்கப்பட

வேண்டும். வழக்கின்போதும் குறிப்பாக பொலிஸ் விசாரணையின்போது சட்டத்தரணி ஒருவர் உடனிருக்க இடமளிக்கப்பட வேண்டும்.

- தடுப்புக்காவல் மையங்கள், 'புனர்வாழ்வு' மையங்கள் மற்றும் பிற தடுப்புக்காவல் இடங்களில் இருக்கும் கைதிகள் மீது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குற்றச்செயலில் ஈடுபட்டதாக முறைப்படி குற்றம்சாட்டி அவர் மீது சர்வதேச தர அளவுகோலுக்கு அமைய நியாயமான வழக்கு நடத்த வேண்டும், குற்றம் உறுதிசெய்யப்பட்டாலும் அவருக்கு மரண தண்டனை விதிக்கக்கூடாது. மேற்சொன்ன நடைமுறை முன்னெடுக்கப்படாத பட்சத்தில் கைதி விடுதலை செய்யப்பட வேண்டும்.

- வெளியுலகுக்கு தெரியவராமல் தடுத்துவைக்கும் முறையை உடனடியாக முற்றிலுமாக கைவிட வேண்டும். உத்தியோகபூர்வமற்ற மற்றும் இரகசியமான தடுப்புக்காவல் மையங்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும். உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தடுப்புக்காவல் மையங்களைத் தவிர மற்ற இடங்களில் யாரையும் தடுத்துவைப்பது சட்டவிரோதம் என சட்டம் இயற்ற வேண்டும். முறையான இடங்களில் தடுத்துவைக்கும்போது, கைதியை அவரது குடும்பத்தினரும், சட்டத்தரணிகளும் வந்து நீதிமன்ற அதிகாரிகளும், சுயாதீன கண்காணிப்பாளர்களும் வந்து பார்க்க இடமிருக்க வேண்டும்.

## சட்டத்துக்கு அப்பாற்பட்ட மரண தண்டனைகள் மற்றும் தடுப்புக்காவலில் ஏற்படும் மரணங்கள்

- சட்டத்துக்கு அப்பாற்பட்ட, முழுமையான வழக்கு விசாரணையற்ற, அல்லது எதேச்சதிகாரமான கொலைகள் பற்றிய குற்றச்சாட்டுகள் அனைத்தும் முழுமையாக விசாரிக்கப்படவும், அவற்றில் ஒழுங்காக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படவும் வேண்டும். சர்வதேச தர அளவுகோல்களுக்கு அமைய குற்றவாளிகள் நீதியின் மு நிறுத்தப்பட வேண்டும். இவை தொடர்பில் முந்தைய ஐநா மீளாய்வின்போது இலங்கை வாக்குறுதிகளை அளித்திருந்தாலும் அவை இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.[95]

## பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமபோனவர்கள்

- பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச ஒப்பந்தத்தை இலங்கை ஏற்று

கடைப்பிடிக்க வேண்டும். அதில் எந்த ஒரு ஷரத்தையும் ஒதுக்கிவைக்காமல், அல்லது ஒதுக்கிவைக்கும் விதமான பிரகடனம் செய்யாமல் முழுமையாம அங்கீகரிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தொடர்பாடல்களைப் பெறவும் பரிசீலிக்கவும் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமல்போனோர் சம்பந்தமான கமிட்டிக்கு அதிகாரம் இருப்பதை இலங்கை அரசு அங்கீகரிக்க வேண்டும். இந்த ஒப்பந்தத்தின் விதிகளை இலங்கையின் தேசிய சட்டங்களில் சேர்க்க வேண்டும்.

- பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டோ அல்லது விருப்பத்துக்கு மாறாக கொண்டுல்செல்லப்பட்டோ காணாமல்போனோர் சம்பந்தமான பணிக்குழு இலங்கை வர செய்திருந்த விண்ணப்பத்தை தாமதமின்றி ஏற்று அவர்களுக்கு வசதிகள் செய்துதர வேண்டும்.
- காணாமல்போனவர்கள் எங்கிருக்கிறார்கள் என்றோ அல்லது அவர்களுக்கு நேர்ந்தது பற்றியோ அறிந்துகொள்ள அவருடைய குடும்பத்தாருக்கு இருக்கும் உரிமை மதிக்கப்பட வேண்டும். காணாமல்போனோர் தொடர்பான ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணையங்கள் மற்றும் பலவந்தமாக கொண்டுசெல்லப்பட்டு காணாமபோனோர் தொடர்பாக விசாரிக்கும் அமைப்புகளுக்கு போதுமான வளங்களும்ம், சுயாதீனமாக செயல்படுவதற்குள்ள உரிமையும் வழங்கப்பட வேண்டும். இவற்றுக்கு சாட்சியம் வழங்கக்கூடியவர்களுக்கு ஒழுங்கான பாதுகாப்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

## மரண தண்டனை

- இலங்கையில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும். ஏற்கனவே விதிக்கப்பட்ட மரண தண்டனைகள் எல்லாம் சிறைத்தண்டனையாக குறைக்கப்பட வேண்டும்.

## குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருந்துவருகின்ற சூழல்

- ஐநா மனித உரிமை ஆணையாளர் அலுவலகமான OHCHR இலங்கையில் நடத்தக்கூடிய விசாரணைக்கு (OISL) இலங்கை முழுமையாக ஒத்துழைக்க வேண்டும். இலங்கையில் மோதலில் ஈடுபட்ட இருதரப்பாரும்

சம்பந்தப்பட்டிருந்த மோசான மனித உரிமை மீறல்கள், துஷ்பிரயோகங்கள் மற்றும் பிற குற்றங்கள் தொடர்பில் நடத்த ஐநாவால் உத்தரவிடப்பட்ட விசாரணை இது.

- சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தொடர்பான ரோம் சட்டத்துக்கு இலங்கை கட்டுப்பட வேண்டும்.

## கருத்து சுதந்திரம், அமைதிகரமாக ஒன்றுகூடுவதற்கும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்குமான சுதந்திரம்

- தனிநபருக்கும் குழுக்களுக்கும் உள்ள கருத்து சுதந்திரம், அமைதிகரமாக ஒன்றுகூடுவதற்கும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்குமான சுதந்திரம் ஆகியவை மதிக்கப்பட வேண்டும். ஒருவர் அல்லது ஒரு குழுவுடைய அபிப்பிராயம், அரசியல் சார்பு எதுவாக இருந்தாலும் சரி இந்த உரிமைகள் மதிக்கப்பட வேண்டும். இந்த உரிமைகளை ஒருவர் செயல்படுத்தும்போது அவருக்கு துன்புறுத்தல் அல்லது அச்சுறுத்தலை ஏற்படுத்திய அல்லது தாக்குதலை நடத்திய குற்றவாளிகள் முறையாக விசாரிக்கப்படவும், சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவும் வேண்டும்.
- தமிழ் சிறுபான்மை சமூகம் அமைதிகரமாக ஒன்றுகூடுவதற்குள்ள உரிமையை பாதுகாக்கவும் அதற்கு உத்தரவாதம் அளிக்கவும் வேண்டும். நீதி கேட்டு அமைதிகரமாக குரல்கொடுக்கவும், யுத்தத்தில் இறந்தவர்களை நினைவுகூறவும் அச்சமுதாயம் ஒன்றுகூடுவதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.
- கருத்து சுதந்திரம், அமைதிகரமாக ஒன்றுகூடுவதற்கும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்குமான சுதந்திரம் ஆகியவற்றை பாரபட்சமான முறையில் கட்டுப்படுத்துவதற்காக PTA சட்டமோ பிற சட்டங்களோ மோசமான விதத்தில் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

## சிறுபான்மையினரின் உரிமைகள்

- சிறுபான்மை சமூகத்தினரின் வழிபாட்டிடங்கள், வியாபார நிலையங்கள் மீதான தாக்குதல்கள் உட்பட நாட்டின் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சிறுபான்மை சமூகத்தினர் மீதான அனைத்துவிதமான தாக்குதல்களையும் நிறுத்தவும் தவிர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- இன, மத சிறுபான்மையினருக்கு எதிராக நடந்ததாக முறையிடப்படும் அனைத்து சம்பவங்களும் ஒழுங்காக விசாரிக்கப்பட வேண்டும். பொதுபல சேனா போன்ற தேசியவாத குழுக்கள் ஈடுபடும் வன்முறைகளும் விசாரிக்கப்பட வேண்டும். குற்றச் செயல் நடந்திருப்பதாக போதுமான ஆதாரம் இருக்கும் பட்சத்தில், அவற்றைச் செய்தவர்களுக்கு எதிராக சர்வதேச தரத்தில் முறையான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# நிறைவுக் குறிப்புகள்

---

[1] ஒப்பந்தத்தின் 40ஆவது ஷரத்தின் கீழ் நாடுகள் சமர்ப்பித்த அறிக்கைகளின் பரீலனை, மனித உரிமைக் கவுன்சில் அறிக்கையின் நிறைவுரையில் தெரிவிக்கப்பட்ட விஷயங்கள், இலங்கை, CCPR/CO/79/LKA , 1 டிசம்பர் 2003.

[2] பார்க்க, Sri Lanka: No end to War on civilians in Sri Lanka: A briefing on the humanitarian crisis and lack of human rights protection, அம்னெஸ்டி இண்டர்நேஷனல், ASA 37/004/2009, 27 மார்ச்2009, http://www.amnesty.org/en/library/info/ASA37/004/2009/en , மேலும் பார்க்க, "The Road to the Camps," in Sri Lanka: Unlock the Camps in Sri Lanka: Safety and dignity for the displaced now – அம்னெஸ்டி இண்டர்நேஷனல் உருவாக்கிய ஓர் விவரணை, ASA 37/016/2009, 10 ஆகஸ்ட் 2009, http://www.amnesty.org/en/library/info/ASA37/016/2009/en; and இலங்கையில் பொறுப்புகூறல் சம்பந்தமாக ஐநா தலைமைச் செயலர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை, 31 மார்ச் 2011 http://www.un.org/News/dh/infocus/Sri_Lanka/POE_Report_Full.pdf, பார்த்த நாள் 25 ஆகஸ்ட் 2014

